Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ராம்கோ ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
(சி-729)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 சித்திரை 16 ஆம் நாள், ஹிஜ்ரி 1424 ஸபர் 26 (29.04.2003) செவ்வாய்க்கிழமை இதழ் : 208



ஆனையிறவு வெற்றி விழாவில் தளபதி கேணல் பானு தேசியக்கொடி ஏற்றுவதை முதலாவது படத்திலும், அணிவகுப்பு மரியாதையை கேணல் தீபன், கேணல் விதுஷா ஆகியோர் ஏற்றுக்கொள்வதை இரண்டாவது படத்திலும், தேசியத் தலைவருக்கான மக்களின் வெற்றிக் கேடயத்தை தளபதிகள் கேணல் சூசை, கேணல் விதுஷா ஆகியோர் பெற்றுக்கொள்வதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# பல்லாயிரம் மக்களின் பங்கேற்புடன் ஆனையிறவு வெற்றிப் பெரு விழா!

## பளைப் பகுதி சன சமுத்திரத்துள் மூழ்கியது

**ஆனையிறவுப் பெருந்தளத்தை விடுதலைப் புலிகள் வெற்றிகொண்ட மூன்றாவது ஆண்டு நிறைவாகவும், தீச்சுவாலை படைநடவடிக்கையை முறியடித்த இரண்டாவது ஆண்டு நிறைவாகவும் பளையில் நேற்று வெற்றிப் பெருவிழா எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது.**

**ஐம்பதாயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள், பல்வேறு பகுதிகளில் இருந்தும் இந்த நிகழ்வுக்கு வந்திருந்தனர். விழாவில் - விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகள், படையணித் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகளும் பங்கேற்றனர்.**

ஆனையிறவுப் பெருந்தளத்தை வெற்றிகொண்டதையும், தீச்சுவாலை நடவடிக்கை முறியடித்ததையும் நினைவு கூரும் வெற்றிப்பெருவிழா நேற்றுக்காலை பளையில் ஆரம்பமானது.

காலை 10 மணியளவில் ஆரம்பமான விழாவில் ஈகச்சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியை மூத்ததளபதி கேணல் பானு ஏற்றினார். இதையடுத்து விடுதலைப் புலிகளின் படையணிகளின் கொடிகளை அந்தந்தப் படையணிகளின் சிறப்புத்தளபதிகள் ஏற்றிவைத்தனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தலைவரின் திட்டமிடல், வழிநடத்தலே ஆனையிறவுத் தளத்தை வீழ்த்தியது!

### வெற்றி விழாவில் மூத்த தளபதி பொட்டம்மான்

பத்து வருடங்களுக்கு முன்னர் இரண்டு சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் இருந்த தளத்தை முறியடிக்க முடியாதபோதும், பத்து வருடங்களின் பின்னர், எண்பது சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் அது பரந்திருந்திருந்த போது புலிகளால் வெற்றிகொள்ளப்பட்டது என, விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி பொட்டம்மான் தெரிவித்தார்.

நேற்றுக்காலை பளையில் இடம்பெற்ற ஆனையிறவு, தீச்சுவாலை முறியடிப்பு வெற்றிப் பெருவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே பொட்டம்மான் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தனது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது-

பத்து வருடங்களுக்கு முன்னர் இரண்டு சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் ஆயிரம் படையினரை மட்டும் கொண்டிருந்தபோது ஆனையிறவுத் தளத்தை முறியடிக்க முடியவில்லை.

ஆனால், பத்து வருடங்களின் பின்னர் எண்பது சதுர கிலோமீற்றர் பரப்பளவில் 40 ஆயிரம் படையினரைக் கொண்டிருந்தபோது ஆனையிறவுத் தளத்தை வெற்றி கொண்டோம்.



இந்த வெற்றியைப் பெற்றுத் தந்தது தலைவர் பிரபாகரனின் மிக நுட்பமான திட்டமிடலுடன் கூடிய வழிநடத்தலேயாகும். எமது தேசியத் தலைவரின் பின்னால் போராளிகளும், பொதுமக்களும் உயிரையும் அர்ப்பணிக்கத் திரண்டுள்ளனர். (10 ஆம் பக்கம் பார்க்க)

## தேசியத் தலைவருக்கு வெற்றிக் கேடயங்கள்

### களமுனைத் தளபதிகளிடம் கையளிப்பு

ஆனையிறவுப் பெருந்தளத்தை வெற்றி கொண்டதற்காகவும், தீச்சுவாலை படைநடவடிக்கையை முடியடித்தமைக்காகவும், தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனுக்கு வெற்றிக் கேடயங்கள் பொது அமைப்புக்களால் வழங்கப்பட்டன.

பல்வேறு பொது அமைப்புக்களாலும் கொண்டுவரப்பட்ட வெற்றிக் கேடயங்கள் பளையில் நேற்று இடம்பெற்ற வெற்றிப் பெருவிழாவில் வைத்து தளபதிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. (10 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்கு வர மறுத்தார் மிலிந்த; உண்மையை பாலா விளக்கினார்!

### 'சண்டே லீடர்' செய்த குழப்பம் தீர்ந்தது

'சண்டே லீடர்' பத்திரிகையில் வெளியான விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனின் பேட்டியின் அடிப்படையில் - புலிகள் தமது நம்பிக்கையை முறித்துவிட்டதாகக்கூறி - பேச்சுவார்த்தையில் இருந்து விலகப்போவதாக அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்று அறிவித்திருந்தார்.

ஆனால், சம்பந்தப்பட்ட செய்தி தவறான அர்த்தத்தில் வெளியிடப்பட்டதாககூறி, புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், மிலிந்தவுடன் தொலைபேசியூடாகத் தொடர்புகொண்டு உண்மை நிலையை எடுத்துக் கூறினார்.

இதையடுத்து பேச்சுக்களில் இருந்து விலகும் தனது முடிவை மிலிந்த மாற்றிக்கொண்டதாகத் தெரிய வருகிறது. (10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரிலுள்ள படைத்தளம் கோட்டைக்கு இடமாறுகிறது!

### மிக விரைவில் என்கிறார் இராணுவப் பேச்சாளர்

யாழ்.நகரில் உள்ள படைத் தளத்தை விரைவில் இடம்மாற்ற நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

யாழ்.நகரில் தனியாருக்குச் சொந்தமான கட்டடங்களில் தங்கியுள்ள படையினரை வெளியேற்றவே நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதன்படி கோட்டைப் பகுதியிலும், பழைய பொலிஸ் நிலையப் பகுதியிலும் புதிதாகப் படைத்தளம் அமைக்கப்படவுள்ளது.

யாழ்.நகரில் உயர்பாதுகாப்பு வல

(10 ஆம் பக்கம் பார்க்க)

# வடபகுதி வைத்தியசாலைகளில் அரசு கூடிய கவனம் செலுத்தும்!

## சுகாதார அமைச்சர் தயாரத்ன

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடபகுதி வைத்தியசாலைகளை, அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன தெரிவித்தார்.

சுகாதாரத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு, உலக வங்கி வழங்கும் நிதியுதவியைப் பயன்படுத்தி யாழ்.புற்றுநோய் மருத்துவமனை நவீனமயப்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டார்.

வவுனியா மாவட்டத் தள வைத்தியசாலையை, பொது வைத்தியசாலையாகத் தரமுயர்த்தும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

வவுனியா பொது வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளை நீக்குவதற்கும், அதன் பொருட்டு வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதியளித்தார்.

# வீட்டுத்தோட்ட உபகரணங்கள் தொண்டமானாறில் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

தொண்டமானாறு பகுதியில் வீட்டுத்தோட்டத்தை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், ஐம்பது வீட்டுத் தோட்ட பயனாளிகளுக்கு வாளி, மருந்து தெளிக்கும் கருவி, மண் வெட்டி, என்பன அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

யுனிசெப் வழங்கிய நிதியுதவியிலிருந்தே இந்தப் பொருட்கள் வழங்கப்பட்டதாக பருத்தித்துறைச் சுகாதாதரப் பகுதியினர் தெரிவித்தனர்.

# மூவாயிரம் தாதியர்களை ஆட்சேர்ப்புச் செய்ய முடிவு

(கொழும்பு)

நாடு முழுவதிலுல் உள்ள வைத்தியசாலைகளில் நிலவும் தாதிகள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய, மூவாயிரம் மருத்துவ தாதிகளை ஆட்சேர்ப்புச் செய்யவுள்ளதாகப் பிரதி சுகாதார அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பின்தங்கிய பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகளில், மருத்துவ தாதிகளுக்கு மோசமான பற்றாக்குறை நிலவுகின்றது. இதனால் பின்தங்கிய பகுதிகளில் அடிப்படைச் சுகாதார வசதிகளை ஏற்படுத்துவதற்கு வசதியாகவே மருத்துவ தாதிகளும் ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளதாக பிரதி அமைச்சர் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்தார்.

# வெண்புறா நிறுவன அலுவலகம் திருகோணமலையில் நேற்று திறப்பு

(திருகோணமலை)

வெண்புறா நிறுவனத்தின் அலுவலகம், நேற்றுக்காலை திருகோணமலை 3 ஆம் கட்டை - ஆனந்தபுரியில் திறந்துவைக்கப்படடது.

வெண்புறா செயற்கை உறுப்பு நிறுவன பெயர்ப்பலகையை, திருகோணமலை மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் திறந்துவைத்தார்.

அலுவலக வளாகத்தினை திருகோணமலை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையச் செயலாளர் ந.சிங்காரவேலு திறந்துவைத்தார்.

ஈகச்சுடரை தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.திலக் ஏற்றிவைத்தார்.

வரவேற்புரையை "சீடா" நிறுவனத்தைச் சேர்ந்த எஸ்.சுமித்திரா நிகழ்த்தினார்.

திருகோணமலை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் மா.தவராஜாவின் தலைமையில் விழா நிகழ்வுகள் நடைபெற்றன.

ஆரம்ப நிகழ்வுகளைத் தொடர்ந்து சக்கர நாற்காலிகள் ஐந்தும், முச்சக்கர வண்டிகள் பத்தும், ஊன்றுகோல்கள் 3 சோடியும் முதற்கட்ட அன்பளிப்பாக அவயவக்குறைபாடு உடையவர்களுக்கு வழங்கப்பட்டது.

நோர்வே தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதியுதவியான 1 லடசத்து 30 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான மேற்படி உபகரணங்கள் திருகோணமலை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் வழங்கப்பட்டன.

நிகழ்வில் வெண்புறா நிறுவனத்தின் பணிப்பாளர் அன்ரனியும் கலந்து கொண்டார். (10)

### மனநோயாளர் விடுதிக்கு தையல் மெசின் அன்பளிப்பு

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையின் மனநோய் வைத்தியப் பிரிவு நோயாளர்களின் நன்மை கருதி, இலங்கை வங்கி பருத்தித்துறை ஊழியர்களால் தையல் மெசின் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

மனநோய் வைத்தியப் பிரிவு நோயாளர்களின் பொழுதுபோக்கை முன்னிட்டு இத்தையல் மெசினை பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் என்.தேவராசா மாவட்ட வைத்திய அதிகாரி எஸ். கதிரவேற் பிள்ளையிடம் கையளித்தார். (17)

## 12 கோரிக்கைகளை முன்வைத்து

# தபாற்சேவை ஊழியர்கள் அடுத்த வாரம் வேலை நிறுத்தம்

(கொழும்பு)

தபாற்சேவை ஊழியர்கள் எதிர் வரும் மே 5 ஆம் திகதி முதல் மே 6 ஆம் திகதிவரை வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

சம்பள உயர்வு உட்பட தமது பன்னிரண்டு கோரிக்கைகளையும் அரசாங்கம் நிறைவேற்றத் தவறினால், தாம் சுகவீன லீவுப் போராட்டத்தை நடத்தப்போவதாக தபாற் சேவை ஊழியர் தொழிற்சங்கங்கள அறிவித்துள்ளன.

நாடளாவிய ரீதியில் இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. தபாற்சேவையில் உள்ள வெற்றிடங்களை நிரப்பவேண்டும், நியாயமான பதவியுயர்வு வழங்கப்பட வேண்டும், சிற்றூழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவேண்டும், தபாற் சேவை கட்டமைப்பு மாற்றப்பட வேண்டும், உட்பட 12 கோரிக்கைகளை தபாற்சேவை ஊழியர் தொழிற் சங்கங்கள் முன்வைத்துள்ளன.

### யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் கருத்துரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கதூய விஞ்ஞானப்பிரிவின் ஏற்பாட்டில், பல்கலைக்கழக பௌதீகத்துறை விரிவுரை மண்டபத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு 'பூகோளம் வெப்பமாதல்- அதனை நிறுத்துவது எப்படி?' என்ற தலைப்பில் கருத்துரை இடம்பெறவுள்ளது.

பேராதனை பல்கலைக்கழக இரசாயனப் பொறியியலாளரும் துறைத்தலைவருமான கலாநிதி இராஜரட்ணம் சாந்தினி கருத்துரையை வழங்குவார். இதில், ஆர்வலர்கள் கலந்து கொள்ளலாமென யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் அறிவித்துள்ளது.

### முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி நுகர்ச்சிச் சங்கங்களின் சமாசத்தில் இன்று காலை 11 மணியளவில், யாழ். மாவட்டத்தின் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் - தலைவர், பொது முகாமையாளர், வர்த்தக முகாமையாளருக்கான கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலிற்கு அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களையும் தவறாது கலந்துகொள்ளும்படி சமாசத் தலைவர் கேட்டுள்ளார்.

# மீனவர் நிவாரணத்தை இடைநிறுத்த யாழ். அரசாங்க அதிபர் ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வரும், மீனவர் நிவாரணத்தை இடைநிறுத்துவது தொடர்பாக, அரச அதிபர் ஆராய்ந்து வருகின்றார்.

கடந்த கால யுத்த நடவடிக்கையினால் மீனவர்களுக்கு, மீனவர் நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அடுத்து, ஆழ்கடல் மீன்பிடித் தொழிலுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிவாரண விநியோகத்தினை இடைநிறுத்தினால் என்ன என்பது பற்றி அரச அதிபர் ஆராய்ந்து வருகிறார்.

இந்த நிவாரணப் பொருட்களை நிறுத்தினால் மீனவர்கள் பாதிக்கப்படுவார்களா? அவர்களுடைய வாழ்க்கைத் தரம் எவ்வாறு அமையும்?, என்பவை பற்றி ஆராயுமாறு பிரதேச செயலர்களை அரச அதிபர் பணித்துள்ளார்.

இந்த நிவாரணப் பொருட்கள் நிறுத்தப்படுவதனால், மீனவர்கள் எதிர்நோக்கக்கூடிய பிரச்சினைகள் தொடர்பாக, பிரதேச செயலர்கள்-கிராம சேவையாளர்களுடன் ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (23)

# பாதுகாப்பு நிலைமைகளை ஆராய கொழும்பில் கலந்துரையாடல்!

(கொழும்பு)

பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக ஆராய்வதற்காக உயர்மட்டக் கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றது.

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ, உள்துறை அமைச்சின் செயலாளர் எம்.என்.ஜுனைட், பொலிஸ் மா அதிபர் ஏ.ஈ.ஆனந்தராஜா ஆகியோர் இந்த உயர்மட்டக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

இந்தக் கலந்துரையாடலில்- வீதித்தடைகளையோ, சோதனைச் சாவடிகளையோ மீண்டும் அமைக்க வேண்டிய அவசியமில்லை என்றும் முடிவுசெய்யப்பட்டது.


புதிய ஜனநாயகக் கட்சியின்
மாபெரும் புரட்சிகர

**மேதினக் கூட்டம்**

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபம்
01-05-2003 வியாழன் காலை 10.00 மணிக்கு

தலைமை
தோழர் கா.கதிர்காமநாதன்

உரையாற்றுவோர்

*தோழர்கள்*

★ சி.கா.செந்திவேல் ★ மு.தியாகராசா
★ சோ.தேவராஜா ★ க.ஆனந்தகுமாரசாமி
★ க.தணிகாசலம் ★ பொ.முருகேசு
★ சி.நவரத்தினம் ★ கா.பஞ்சலிங்கம்

*மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள்*

அனைவரும் வருக

*407, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.* புதிய ஜனநாயகக் கட்சி

(331)



ராஜா யாழ்ப்பாணம்.

1 ஆம் திகதிவரை
சரத்குமார் (இருவேடம்), சிம்ரன், ரோஜா, வடிவேல் நடித்த
அரசு
10.30, 2.30, 6.30, 9.30
BEST OF THE BEST 2
இன்று மட்டும் இரவு 9.30
(சி-732)



நிறஞ்சனாஸ் சங்கானை

விஜய், ரம்பா நடித்த
என்றென்றும் காதல்
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு (இரவு 8.45)
CHINA STRIKE FORCE


# இன்றைய நாள் இனிய நாள்

## 29-04-2003 - செவ்வாய்க்கிழமை

| | |
|---|---|
| மேடம் | :- வியாதி, காரிய அனுகூலம், நற்கீர்த்தி, தொழில் சிறப்பு, ஐஸ்வரியம். |
| இடபம் | :- புதியஸ்தானம், பொருள்வரவு, தொழில் சிறப்பு, பெரியோர் ஆதரவு, வாகன சுகம். |
| மிதுனம் | :- சிநேகலாபம், சௌக்கியம், பிரயாணத்தால் நன்மை, குடும்ப மகிழ்ச்சி. |
| கர்க்கடகம் | :- இனசன கவலை, தேகசுகக் குறைவு, குறைகேட்டல், ஆயுத் விஷ பயம். |
| சிங்கம் | :- நேத்திர ரோகம், பயனற்ற பிரயாசம், வீண்பழி கேட்டல், மனச்சோர்வு. |
| கன்னி | :- தனவிருத்தி, சந்தோஷ மிகுதி, சிநேகலாபம், புதிய ஸ்தானம், நற்குண விருத்தி. |

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

| | |
|---|---|
| துலாம் | :- இரதப் பெருக்கு, தாரசுகத் தடை, கவலை, தொழில் குறைவு, மனவேதனை. |
| விருச்சிகம் | :- இனசன கொண்டாட்டம், நன்மதிப்பு, சிநேக நன்மை, குடும்ப மகிழ்ச்சி. |
| தனு | :- சரீர சோர்வு, தாழ்ந்த நிலை, விஷ பயம், இரத்த சம்பந்தமான ரோகம். |
| மகரம் | :- காரிய வெற்றி, தொழில் விருத்தி, மன மகிழ்ச்சி, பிரயாணம், தனலாபம். |
| கும்பம் | :- குடும்ப மனஸ்தாபம், பிரயாசை மிகுதி, தர்ம காரிய சித்தி, பொருட்சேதம். |
| மீனம் | :- நிலை மாற்றம், வீண்பழி கேட்டல், தனலாபமின்மை, களஸ்திர மகிழ்ச்சி. |

### அடுத்த சில தினங்களில் பாலாவுக்குப் பதில்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்களிலிருந்து தற்காலிகமாக விலகிக்கொள்வதாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பால சிங்கம் - பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு அனுப்பிய கடிதத் துக்கான பதில் இன்னும் சில தினங் களில் அனுப்பி வைக்கப்படவுள் ளது. இந்தத் தகவலைப் பிரதமர் அலுவலக வட்டாரங்கள் வெளி யிட்டன.

### காணித்தகராறில் காயம்

(யாழ்ப்பாணம்)

காணி எல்லைப் பிரச்சினை காரணமாக கோடரி பிடியினால் தலையில் தாக்கப்பட்டு மண்டை உடைந்த நிலையில் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை இடம் பெற்ற இச்சம்பவத்தில் உடுவில் தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த நடேஸ் ஜெயஒளிபவன் (வயது 52) என்பவரே காயமடைந்தவராவர்.(ரா,சு)

## எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகளுக்கு ஏற்ப

# நோர்வேயை சந்திரிகா வெளியேற்ற முடியுமா?

## லங்கா சமசமாசக் கட்சி கேள்வி



எதிர்க்கட்சிகள் கோரியுள்ளது போல சமாதான முயற்சிகளின் மத் தியஸ்தர் நிலையிலிருந்து நோர்வே அரசாங்கத்தை எவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் நீக்க முடியும் என்று கேள்வி எழுப்பியுள் ளார் லங்கா சமசமாஜக் கட்சியின் அரசியற்பீட உறுப்பினரான லால் விஜயநாயக்க.

சமாதான முயற்சிகளைச் சீர்கு லைக்க எதிர்க்கட்சிகள் முனைவதா கக் குற்றஞ்சாட்டி, அவர் வெளியிட் டுள்ள அறிக்கையில் மேலும் குறிப் பிடப்பட்டுள்ளதாவது,

அரசியல் நலனுக்காக எதிர்க் கட்சிகள் சமாதான முயற்சிகளைக் குழப்ப முனையக்கூடாது. எந்த வொரு அரசியல் கட்சியுமே சமா தான முயற்சிகளைப் புறக்கணிக் காமல், ஆதரவளிக்க முன்வரவேண் டும்.

விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிகளிலிருந்து விலகிக்கொண் டாலும், அவர்கள் புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி போர்நிறுத் தத்தைத் தொடர்ந்தும் பேணி வருகி றார்கள்.

இந்தநிலையில், எதிர்க்கட்சிகள் ஜனாதிபதி சந்திரிகாவை - அதிகா ரங்களைக் கையிலெடுத்து, நோர் வேயை மத்தியஸ்தப் பொறுப்பிலி ருந்து நீக்கவேண்டும் எனக் கோரியி ருப்பதற்கு லங்கா சமசமாசக் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு நோர்வேயை மத்தி யஸ்தப் பொறுப்பிலிருந்து ஜனாதி பதி சந்திரிகாவினால் எவ்வாறு நீக்க முடியும்? அவர்தான் நோர்வேயை மத்தியஸ்தப் பணிக்குக்கொண்டு வந்திருந்தார்.

அரசாங்கம் வட-கிழக்குப் பகுதி களில் புனர்வாழ்வு, புனரமைப்பு பணி களைத் தீவிரப்படுத்த வேண்டும். அதன் மூலமே புலிகளை மீண்டும் பேச்சுக்குக் கொண்டுவரமுடியும். புலிகளும் ரோக்கியோ மாநாட்டுக் குச் செல்வது அவசியமாகும் என வும் லால் விஜயநாயக்க மேலும் தெரிவித்தார்.

# சார்ஸ் தொற்றுநோய் தொடர்பாக மக்களுக்கு அச்சமூட்ட வேண்டாம்

## சுகாதாரசேவை பணிப்பாளர் அறிவிப்பு

சார்ஸ் தொற்றுநோய் குறித்துப் பொதுமக்களுக்கு அச்சமூட்டும் வகையில் செயற்படவேண்டாம் என்று சுகாதார அதிகாரிகளை- சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் அத் துல கேட்டுள்ளார்.

சார்ஸ் தொற்றுநோய் தொடர் பான விழிப்புணர்வை மக்கள் மத்தி யில் ஏற்படுத்தும்போது, அவர்களுக் குப் பீதியூட்டும் வகையில் சுகாதார அதிகாரிகள் நடந்துகொள்வதான முறைப்பாடுகளையடுத்தே, சுகாதார சேவைகள் பணிப்பாளர் இவ்வாறு கேட்டுள்ளார்.

இதற்கிடையில், குருநாகல் ஆஸ்பத்திரியிலிருந்து அங்கொட தொற்றுநோய்த் தடுப்பு வைத்தியசா லைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட வெளிநாட்டு நோயாளி ஒருவர் மர ணமானது தொடர்பாக எவரும் அச் சம் கொள்ளத் தேவையில்லை என் றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

மேற்படி நோயாளிக்குச் சார்ஸ் நோய் ஏற்பட்டிருக்கவில்லை என்று மருத்துவப் பரிசோதனைகள் மூலம் தெரியவந்திருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# மூதூரில் ஏற்பட்ட சேதங்கள் உயர்மட்டக் குழு மதிப்பீடு

(திருமலை)

மூதூரில் இடம்பெற்ற கலவரங்க ளின்போது ஏற்பட்ட சேதவிபரங்களை புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையின் குழுவொன்று நேரில் மதிப்பீடு செய்துள்ளது.

நேற்று முன்தினம் மூதூருக்குச் சென்ற இந்தக் குழுவினர்- கலவரங் களின்போது ஏற்பட்ட சேதங்கள் குறித்து மதிப்பீடுகளை மேற்கொண் டனர்.

இந்தக் குழுவினர் தமது அறிக் கையைக் கிழக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு துறைமு கங்கள் கப்பற்துறை அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு வழங்குவர் என வும் தெரியவருகிறது.

(க)




படங்கள் - லிவிங்ஸ்டன்

# 1983 இல் நிகழ்ந்த தவறுபோல இனிமேலும் நடக்கக்கூடாது!

## அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் அறிக்கை

சமாதானப் பேச்சுவார்த்தைகள் வெற்றி அளித்து, அரசியற்தீர்வு காணப்பட வேண்டும் என்பதே அரசாங்க எழுதுவினைஞர் சேவை சங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.

அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட யுத்தநிறுத்தம் நல்ல அடித்தளமாக அமைந்துள்ளது என்றும் அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

யுத்த நிறுத்தத்தினால் மனித உயிர்கள் பலியாவது நிறுத்தப்பட்டிருக்கிறது. இருதரப்பினரும் கடந்த காலத் தவறுகளைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, நம்பிக்கையுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டும்

1983 ஆம் ஆண்டு நடந்த சம்பவங்கள் மனித உரிமைகளை மீறுவதாக அமைந்திருந்தன. இவ்வாறான தவறுகள் இனிமேல் நடைபெறாமல் இருப்பதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்.

எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புக்களுக்கு மத்தியில், இந்த அரசாங்கம் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கின்றது.

சமாதானத்தை விரும்பும் சகல அரசியல் கட்சிகளின் அபிப்பிராயங்களைப் பெற்றுக்கொள்வதே இந்த அரசாங்கத்தின் கடமையாகும் என்று அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

# முஸ்லிம்களின் காணிப்பிரச்சினை இன்று உபகுழுவில் ஆராயப்படும்

முஸ்லிம்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான காணிப் பிரச்சினைகள் குறித்து ஆராயும் உபகுழுவின் கூட்டம் இன்று வவுணதீவில் நடைபெறுமென்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு அலுவலகம் அறிவித்துள்ளது.

புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் - முஸ்லிம் விவசாயிகள் விவசாயம் செய்யப் புலிகள் அனுமதி வழங்கியதன் பின்னர் ஏற்பட் டுள்ள நடைமுறைச் சிக்கல்கள் தொடர்பாக இந்த உபகுழுவின் கூட்டத்தில் ஆராயப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# பருத்தித்துறையிலிருந்து சுண்டிக்குளம் வரை கலங்கரை விளக்கமின்றி மீனவர் அவதி!

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மணற்காடு தொடக்கம் சுண்டிக்குளம் வரையிலான கரையோரப் பகுதிகளில் கலங்கரை விளக்குகள் இல்லாததால், கடற்தொழிலாளர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனால், வெற்றிலைக்கேணியிலுள்ள கலங்கரை விளக்கை இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி கடற்தொழிலாளர்களிடமிருந்து கோரிக்கை விடப்பட்டுள்ளது.

சமாதானச் சூழ்நிலையில் - ஆழ்கடலில் மீன்பிடிக்க அனுமதியளிக்கப்பட்ட பின், கூடுதலான கடற்தொழிலாளர்கள் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர்.

இரவுநேரத்தில் நீண்டதூரம் சென்று மீன்பிடியில் ஈடுபடும் வள்ளங்கள், கரை திரும்புவதற்கு இந்தக் கலங்கரை விளக்குகள் மிக அவசியமானதாகும். தற்போது பெரும் தொகையான கண்ணாடியிழை வள்ளங்கள் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளன.

சூறாவளி, கடற்கொந்தளிப்பு நேரங்களில் மீன்பிடியில் ஈடுபட்டுள்ள வள்ளங்கள் கரை திரும்புவதற்கு இந்தக் கலங்கரை விளக்குகள் மிக இன்றியமையாததாகும்.

பருத்தித்துறை முனையிலுள்ள கலங்கரை விளக்கு இயங்குவதில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறையிலிருந்து சுண்டிக்குளம் வரையிலான 40 கி.மீ. தூரத்திற்கு எந்தவிதமான விளக்குகளும் இல்லாது தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்படுவதாகவும் தெரியவருகிறது.

இந்நிலையில் ஆயிரக்கணக்கான கடற்தொழிலாளர்களின் அத்தியாவசியத் தேவையான கலங்கரை விளக்குகளை மீளவும் இயங்க வைப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பத்து நூதனசாலைகளை புனரமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, அம்பாறை, அனுராதபுரம், கண்டி, காலி, மாத்தறை, கேகாலை ஆகிய மாவட்டங்களிலுள்ள பத்து நூதனசாலைகளைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகக் கலாசார அமைச்சர் கருணசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

இந்த மாவட்டங்களில் இடம் பெற்ற சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்களை ஓவியங்களாக வடிப்பதற்கும், தலா நூறு ஓவியங்களை ஒவ்வொரு நூதன சாலையிலும் காட்சிக்கு வைப்பதற்குத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

வேகமாக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த நபர், நிலை தடுமாறி விழுந்து காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

தெல்லிப்பளையைச் சேர்ந்த வைரமுத்து கிருபாகரன் (வயது 29) எனும் நபரே இடதுகால் முறிந்து காயமடைந்தவராவார்.

# அரியாலை, கொழும்புத்துறை மக்களின் குறைபாடுகளைத் தீர்க்க நடவடிக்கை

## அரச அதிபர் தலைமையிலான கூட்டத்தில் முடிவு

அரியாலைப் பிரதேசத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பாதிக்கப்பட்ட மக்களின் குறைகளை நிவர்த்திசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை யாழ்.அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் ஜே/94, ஜே/95, ஜே/96 கிராமசேவகர் பிரிவுகளுக்குட்பட்ட மக்களின் குறைகேள் கலந்துரையாடலிலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் செந்தில்நந்தனன், நல்லூர் பிரதேச செயலர் வே.முருகையா, நல்லூர் பிரதேச சபைச் செயலாளர், யாழ்.மாநகரசபை ஆணையாளர், யாழ். மாநகர சபை உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஜே/94, ஜே/95, ஜே/96 கிராம சேவகர்கள், பொதுமக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், திட்டமிடல் உத்தியோகத்தர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

மேற்படி மக்கள் குறைகேள் கலந்துரையாடலில் அரியாலைப் பகுதி மக்களின் குறைகளைக் கேட்டறிந்து, உரிய அதிகாரிகள் மூலம் அவற்றைத் தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

மூன்று மாதத்திற்குள் மின்சாரம் இல்லாத பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குதல், அதேகாலப்பகுதிக்குள் குடிநீர் விநியோகம் செய்தல், வறுமைக்கோட்டின் கீழுள்ள மக்களுக்கு மலசலகூடம், கிணறுகள் சேதமடைந்த, அவை இல்லாத வீடுகளுக்கு அவற்றைக் கட்ட 25 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள், பொருட்கள் வழங்கல் மற்றும் சேதமடைந்த வீடுகளைக் கொணட வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கு 40 ஆயிரம் ரூபா பெறுமதியான சீற், சீமெந்து, மணல், மரங்கள் போன்ற பொருட்களை வழங்க ஏற்பாடுசெய்தல்.

அரியாலையிலுள்ள சகல சேதமடைந்த வீதிகளை அப்பகுதிகளுக்குப் பொறுப்பான தொழில்நுட்ப உத்தியோகத்தரைக்கொண்டு சேதமதிப்பீடு செய்து அவற்றைத் திருத்திக் கொடுக்க ஒழுங்கு செய்தல்.

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையை மீண்டும் சொந்த இடத்தில் இயக்குவதற்குரிய நடவடிக்கை எடுத்தல் என்பன போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இதேவேளை, கடந்த 26 ஆம் திகதி கொழும்புத்துறை சந்திரசேகரப் பிள்ளையார் கோயில் முன்றலில் நடைபெற்ற இன்னுமொரு மக்கள் குறைகேள் கலந்துரையாடலில் - கொழும்புத்துறை பகுதி மக்களின் குறைகளைத் தீர்க்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. (55)

## பதில் பிரதேச செயலராக நியமனம்

(வடமராட்சி கிழக்கு)

கரவெட்டி உதவி பிரதேச செயலர் க.சிவபுண்ணியம் பதில் பிரதேச செயலராக நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை பிரதேச செயலராக இருந்த க.கனகரட்னம் பொறுப்புக்களை சிவபுண்ணியத்திடம் ஒப்படைத்துள்ளார். (17)

# சின்னஞ்சிறு செய்திகள்

## காலாவதியான பிஸ்கட்கள் அழிப்பு

(நவிண்டில்)

பருத்தித்துறைச் சுகாதாரப் பகுதியினரின் திடீர் பரிசோதனை நடவடிக்கையின்போது - உடுப்பிட்டி, வல்வெட்டித்துறைப் பகுதியிலுள்ள கடைகளில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த காலாவதியான ஏராளமான பிஸ்கட் பைக்கற்றுகள் அழிக்கப்பட்டன. இது தொடர்பாகக் கடை உரிமையாளர்கள் எச்சரிக்கப்பட்டதாகச் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் என்.ஜே.ஞானசுதன் தெரிவித்தார். (116)

## இலக்கத் தகடுகள் பெற அறிவுறுத்தல்.

(நவிண்டில்)

பருத்தித்துறை நகரசபைக்கு உட்பட்ட அனைத்துத் துவிச்சக்கர வண்டிப் பாவனையாளர்களும், தமது துவிச்சக்கர வண்டிக்கான இலக்கத் தகடுகளை நாளைக்கு முன்னதாகப் பெற்றுக்கொள்ளும்படி பருத்தித்துறை நகரசபை தெரிவித்துள்ளது. (116)

## வடமராட்சி கிழக்குப் பகுதியில் 175 வீடுகள் அமைக்கப்படும்

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள வெற்றிலைக்கேணி, முள்ளியான் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் ஜி.ரி.இசட் நிறுவனம் 175 வீடுகளைக் கட்டிக் கொடுக்க முன்வந்துள்ளது.

வெற்றிலைக்கேணியில் 75 வீடுகளும், முள்ளியானில் 100 வீடுகளும் கட்டிக்கொடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (17)

## மண்டைதீவு மீனவருக்கு மீன்பிடி வள்ளங்கள்

மண்டைதீவு கடற்தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த ஆறு மீனவக் குடும்பங்களுக்கு வள்ளங்கள் வழங்கப்பட விருக்கின்றன.

வறுமைக்கோட்டின் கீழுள்ள குடும்பங்களை இனங்கண்டு அவர்களின் சுயமுயற்சியை ஊக்குவிப்பதற்காக இந்தத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் ஐம்பது ஆயிரம் ரூபாவை வழங்கவுள்ளது. (23)

# காட்சிப் புடைவைகளை அகற்றவில்லை யாழ். மாநகர ஆணையாளர் விளக்கம்!

யாழ்.நவீனசந்தையின் உட்புறம் மற்றும் வெளிப்புறக் கடைகளின் முன்பாகப் பொருத்தப்பட்டிருந்த றாக்கைகளால் பொதுமக்களுக்குப் பல்வேறு வகையான இடைஞ்சல்கள் ஏற்பட்டு வருவதனால், அவற்றினை அகற்றுமாறு மாநகரசபை பலதடவைகள் கோரியிருந்தும் அவை அகற்றப்படாததாலேயே தாம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி வந்ததாக யாழ்.மாநகர ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான செய்தி பற்றி அவர் அளித்துள்ள விளக்கம் வருமாறு-

சித்திரைப் புதுவருட வியாபாரத்தின் பின்னர் றாக்கைகளை அகற்றுவதாகவும், அதுவரை அவகாசம் தரும்படியும் வர்த்தக சங்கமும், கடை உரிமையாளரும் - மாநகரசபையிடம் கோரியிருந்தனர்.

அவர்களது நியாயபூர்வமான கோரிக்கையை ஏற்றுச் சித்திரை 15 ஆம் திகதிவரை கால அவகாசம் வழங்கியபோதிலும், அவர்கள் ஒப்புக்கொண்டதற்கு இணங்க செயற்படத் தவறிவிட்டனர்.

இந்நிலையில் குறிப்பிட்ட சட்டவிரோத றாக்கைகளை அகற்றுவதற்கு இறுதிச்சந்தர்ப்பம் வழங்கப்பட்டபோதிலும், அவர்கள் அக்கால எல்லைக்குள் அதனை நிறைவேற்றத் தவறியமையினால் கடந்த 24 ஆம் திகதி காலை 7 மணிமுதல் சபையின் பணியாளர்கள் அவற்றை அகற்ற ஆரம்பித்து காலை 8.30 மணியளவில், சகல கடைகளும் திறக்கப்படுவதற்கு முன்னரே அப்புறப்படுத்திவிட்டனர்.

கடைகள் திறக்கப்படுவதற்கு முன்னரே தமது நடவடிக்கைகள் பூர்த்தியடைந்தமையினால், காட்சிப் புடைவைகளை அகற்றவோ, கைகலப்பு ஏற்படுவதற்கோ வாய்ப்பு அறவே இல்லை என்று மாநகரசபை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

ஆறாவது அகவையில்



பெயர் : ச.ஜதுஷோபனா

முகவரி: கோண்டாவில்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி :------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------------

பெற்றார் ஒப்பம்

# எறியும் தொலைபேசியை




# புனரமைத்து விற்பனை

பழுதடைந்த கையடக்கத் தொலைபேசிகளை மீளச் செப்பனிட்டு, அவற்றைக் குறைந்த விலையில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் தலையில் கட்டிவிடும் கைங்கரியத்தை அமெரிக்க நிறுவனமான 'ரிசெலுலர்' என்ற கம்பனி ஆரம்பித்திருக்கின்றது.

பழுதடைந்த பின்னர் வீசி எறியும் இந்த கையடக்கத் தொலைபேசிகளைப் பெற்றுக் கொண்டு, வாடிக்கையாளர்களுக்குப் புதிய தொலைபேசியை வழங்கும் இந்த நிறுவனம், பழைய தொலைபேசியைச் செப்பனிட்டு மீண்டும் விற்பனைக்காக வளர்முக நாடுகளுக்கு அனுப்புகிறது.

வீணாக எதையும் ஏன் குப்பைக்குள் வீசவேண்டும்? நாம் 100 வீத மீள் புனரமைப்புச் செய்து இத்தொலைபேசிகளை விற்பனைக்கு விடுகிறோம் என்கிறார் 'ரிசெலுலர்' நிறுவன நிதிமுகாமை அதிகாரி.



சனிக்கிரகத்தின் துணைக் கோளான டைட்டனின் நிலப்பகுதி பனியால் நிறைந்துள்ளதாக, இக் கோளின் செம்மஞ்சள் முகில் கூட் டத்தை ஊடறுத்துப் பார்த்த விண் ணியல் நிபுணர்கள் தெரிவித்தனர். டைட்டனின் தரைத்தோற்றமும், வியாழனின் துணைக்கோளான கனிமீட்டின் தரைத்தோற்றமும் ஏறத்தாழ ஒரே மாதிரியாகவே இருக்கின்றதாம்.

டைட்டனின் நிலவமைப்பை

# டைட்டன் துணைகோளில் சேதனச் சேர்வைகள்

நோக்கும்போது, அது பல சேதனச் சேர்வைகளைக் கொண்டிருப்பதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஹைட்ரோ காபன் நிறைந்த இக்கோளுக்கு, அடுத்த ஆண்டில் செயற்கைக் கோள் ஒன்று அனுப் பப்படவுள்ளது.



# உலகப் புகழ் பெற்ற இயக்குநர்கள்


(சென்றவாரத் தொடர்ச்சி)

துயரம் சார்ந்த இந்தப் படத்தை ஐந்து பிரிவு களாகப் பிரிக்கலாம். முதல் பகுதிக்கு 'மனிதனும் புழுவும்' என்று பெயர் சூட்டியிருந்தார். இப்படியே ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு பெயரை ஐஸென்ஸ் ரைன் சூட்டியிருந்தார். 1927 ஆம் வருடத்தில் மகத் தான ரஷ்யப் புரட்சியின் பத்தாவது வருடத்தில், புரட்சியின் ஞாபகார்த்தமாக ஒக்ரோபர் (**OCTOBER**) படத்தை இயக்கி வெளியிட்டார்.

ஒரு வகையில் சொல்வதானால், ரஷ்யப் புரட்சி தான் இந்தக் கலைஞரை உருவாக்கியிருக்கிறது.

உதாரணமாக - 'ஸ்ட்ரைக்' படத்தில் போராளிகள் கொல்லப்படுவதை மட்டுமே அவர் காண்பிக்கவில்லை. தப்பிக்க வழியற்ற அவர்கள், குரூரமாகக் கொல்லப் படுகிறபோது, நடுவே காட்டுமிருகங்கள் ஒன்றை யொன்று கோரமாகத் தாக்கிக்கொள்ளும் - கொல் லும் காட்சிகள் இடம்பெறுகின்றன. இந்த மாதிரியான உட்செருகல் காட்சிகளின் மூலம் பார்வையாளர்களை மிருகத்தனமான, கொடூரமான மரணங்களின் விளைவை வெகுதுல்லியமாகவும் உயர்ந்தபட்சப் பாதிப்பு ஏற்படும் விதமாகவும் உணரவைக்கிறார். இத்தகைய காட்சி களின் பின்னணியில் பார்வையாளர்கள் - அடக்கு முறை ஆட்சியாளர்களை எதிர்க்கும் மனோவேகத்தை அந்த நொடியிலேயே உணர் கின்றனர். அரசியற்கொலை களின் கொடூரம் மிகச்சிறிய நேரத்தில்- மிகப்பெரிய பாதிப்பை மனத்துள் ஏற்படுத் திவிடுகிறது.

அங்கம் - 02



ஐஸென்ஸ்ரைனின் படத்திலிருந்து ஒரு காட்சி

இதை வலுப்படுத்தும் மற றொரு உதாரணத்தையும் பார்க்கலாம்-

'பற்றில் ஷிப் பொடம் கின்' படத்தில் இந்த முயற்சி ஒரு கவிதை வடிவம் பெறு கிறது. கஸாக் இராணுவ வீரர்கள் ஒன்றுமறியாத அப் பாவி ஜனங்கள்மீது கண் மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்துகின்றனர். இந்தக் காட்சியில் கமரா இருண்ட, வெளிச்சம் குறைந்த, அதிக வெளிச்சமான பகுதிகளில் மாறிமாறி ஊசலாடுகிறது. மேலும், கீழும் நகர்கிறது. ஒட்டுமொத்தமாக எதிரே நிற் கிற மக்களின் பீதியும், மரண ஓலமும், பயங்கரங்களும் பார்வையாளர்களை ஆழ மாய்ப் பாதிக்கிறது. துப்பாக்கியிலிருந்து வெளிப்படும் குண்டுகளைவிட, அதை நேரிடும் ஜனங்களின் முகப் பிரதிபலிப்பே முக்கியத்துவம் பெறுகிறது. மேற்குறிப் பிட்ட உணர்வே இங்கும் ஆட்சியாளர்கள் மீது பார் வையாளர்களுக்குத் தோன்றுகிறது. குறிப்பிட்ட இந்தக் காட்சியின் ஒளி அமைப்பும், கமராவின் இயக்கமும் சம்பவத்தைக் கவிதை நடையில் உணர்த்துகிறது. இங்கே டைரக்டர், தான் சொல்ல விரும்புகின்ற விட யத்தை வேறெந்த இடைபொருளுமில்லாமல் தெளி வாகச் சொல்லிவிடுகிறார். இதேபோன்ற ஏராளமான நுட்பம் செறிந்த பகுதிகள் ஐஸென்ஸ்ரைனின் படம் முழுவதும் விரவிக்கிடக்கிறது.

கலை அம்சத்தை அவர் கையாண்டமுறை புது மையானது, அழுத்தமானது. சினிமாவின் வளர்ச்சிப் படியில் இந்த மாதிரி நிகழ்ச்சிகள் மைல் கல்லாகப் போற்றப்படுகின்றன. இத்தகைய மேதைமைத்திறனே ஐஸென்ஸ்ரைனை உலகப்பெரும் புகழுக்கு உயர்த் தவும் செய்தது.

1928 இல் வெளியான 'வின்டர் பலஸ் / ரென் டேய்ஸ் தட் ஷுக் த வேர்ல்ட்' (**WINTER PALACE / TEN DAYS THAT SHOOK THE WORLD**) படத்தையும் சிறந்த படங்களின் வரிசையில் சேர்க்கலாம். இந்தப் படத்தின் மூலம் மனிதமனத்தின் உள்ளுணர்வு களைத் தொடமுடியும் என்று அவர் நிருபித்தார்.

## ஐஸென்ஸ்ரைன்

இவரது ஆரம்ப காலப்படங்கள் புரட் சியின் அடிப்படையி லேயே அமைந்திருக் கின்றன. இவரது படங் களில் சொல்லப் பட்டுள்ள கருத்துக்களைவிட, அவை சொல்லப்பட்ட முறைதான் கவனத்துக்குரியது. இவரது கதை சொல்லப்படும் பாணி மட்டும் இத்தகைய தன்மை பெறாமல் போயிருந்தால், தயாரிப்பாளர்களால் இவர் நிச்சயமாக நிராகரிக்கப்பட்டிருப்பார்.

ஐஸென்ஸ்ரைனின் பாணி அடிப்படையிலேயே அதிர்ச்சி தரத்தக்க விதத்தில் அமைகிறது. இவர் கமராவை எதிரே நடக்கும் சம்பவங்களை அப்படியே பதிவு செய்வதற்காகப் பயன்படுத்து வதில்லை. மாறாகக் காட்சிகளுடன் ஒரு போராட்டமே நடத்திப் பார்வையாளர்களின் மனத்தில் ஆழ்ந்து இறங் கும்படியான விளைவை ஏற்படுத்துகின்றார். மொன்டாஜ் (**MONTAGE**) என்கிற எடிட்டிங் முறையை இவர்தான் அறிமுகப்படுத்தினார். இவரது படத்தில் எடிட்டிங் ஒரு கதையையோ, சம்பவத்தையோ தொடர்ச்சியாகச் சொல்லிவிட்டுப் போவதுடன் நின்று விடுவதில்லை. அவர் சொல்லவந்த மையக்கருத்தை வலியுறுத்தும் விதமாகவும், அழுத்தமாகவும், தெளிவாகவும் ரசிகர் களைச் சுயசிந்தனைக்கு ஆட்படுத்துகிறது.

# ரோர்ச் அடித்துப் பார்க்கும்



புதுமையான ஓர் ஓவியக் கண் காட்சி நோர்வே யில் நடைபெறு கிறது. ஓவியரான எட்வேட் மூஞ் வரைந்த பல ஓவி யங்கள் ஓர் காட் சிக்கூடத்தில் இருக கிறது. ஆனால், அக்கூடத்தினுள் எந்தவித வெளிச் சமும் இராது. பார்வையாளர்கள்

# நோர்வே ஓவியக்காட்சி

ரோர்ச் வெளிச்சத்திலேயே ஓவியங்களைப் பார்வையிட வேண்டும்.

இதற்குக் காரணம் என்ன? இந்த ஓவியங்கள் பிரகாசமான மின் ஒளியில் அல்லது சூரிய வெளிச்சத்தில் நிறமிழந்து மங்கிவிடக் கூடியவையாம். ஆனால், இருட்டிலும் ரோர்ச் அடித்து ஓவியம் பார்ப்பதை நோர்வே மக்கள் பெரிதாக விரும்பவில்லை. மூஞ் - நோர்வேயின் பிரபல ஓவியர், உலகில் நன்கு அறியப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இரட்டைச் சங்கிலி டி.என்.ஏ

பரம்பரை அலகு டி.என்.ஏ குறித்த விபரங்களைப் பிரபல விஞ்ஞான சஞ்சிகையான நேச்சர் வெளியிட்டு, கடந்த 25 ஆம் திகதியுடன் 50 வருடம் பூர்த்தியாகிறது. டி.என்.ஏயின் வடிவமைப்பு 1953 ஏப்ரல் 25 ஆம் திகதி இச் சஞ்சிகையில் முதன்முதலாக வெளியாகியது.



இதனை வடி வமைத்த வற் சனும், கிறீக்கும் இக்கண்டுபிடிப்புக் காக நோபல் பரி சிசையும் பெற் றனர். அச்சமயத்

# அறிமுகமாகி 50 ஆண்டுகள்

தில் டி.என்.ஏ. பற்றிப் பலர் அறிந்திருந்தாலும், அதன் வடிவமைப்பு இவ்வாறு இரட்டைச் சங்கிலி முறுக்கப்பட்ட ஏணி வடிவில் இருக்கும் என்பதை உலகுக்கு முதலில் காட்டியவர்கள் வற்சனும், கிறீக்குமே.

## திரை விமர்சனம்



# ஸ்டுடண்ட் நம்பர் 1



தெலுங்கிலிருந்து தமிழுக்கு மாற்றப்பட்ட படம். ஆந்திராவின் வியாபாரத் தந்திரங்கள் தமிழில் செல்லுபடியாகாது என்பதற்கு இந்தப்படம் நல்ல உதாரணம்.

இந்தக்கல்லூரியில் ஒருவரும் படிக்கக்கூடாது. படிப்பில் ஆர்வம் காட்டினால் அவ்வளவுதான் என்று கர்ஜித்தபடி வலம் வரும் வில்லனும் ஒரு கல்லூரி மாணவன்தான்.

சத்தியராஜின் மகன் சிபி நாயகனாக அறிமுகமாகியுள்ளார். அப்பாவின் அதேமுகம். அதே கட்டுமஸ்தான உடல். முதல் படம் என்பதால் அவ்வப்போது போலித்தனம் வெளிப்படுகிறது. ஆனாலும், சமாளிக்கிறார். சண்டைக்காட்சிகளில் துடிப்புத் தெரிகிறது. நடிப்பு முறை, உச்சரிப்பு, முகபாவங்கள் எவ்வளவோ இவர் புதிதாகக் கற்கவேண்டும்.

வில்லனை அடித்துவிட்டு - நீங்கள் எல்லாம் வீட்டிலிருந்தும், ஹொஸ்டலில் இருந்தும் கல்லூரிக்கு வருகின்றீர்கள். ஆனால், நான் சிறையிலிருந்து வருகிறேன் என்று கதாநாயகன் கூறுவது நல்லதிருப்பம்.


யுகேந்திரன் சுறுசுறுப்பாக நடந்துள்ளார். கதை மட்டும் அங்குமிங்குமாய் இழுபட்டுக் கஷ்டப்பட்டு முடிந்ததாகத் தெரிகிறது.

அனுபவம்மிக்க இயக்குநரான செல்வா- காட்சிகளைக் கோர்வைப்படுத்துவதிலும் சரி, விறுவிறுப்பூட்டுவதிலும் சரி பெரும் தவறுவிட்டுள்ளார்.

ஸ்டுடண்ட் நம்பர் 1 குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய எதுவுமில்லை.

# விண்வெளியில் ஒரு தபால் வியாபாரம்

இருபதாயிரம் டொலரை செலவிட்டால் விண்வெளியில் உள்ள சர்வதேச விண் நிலையத்துக்கு நீங்கள் ஒரு தபாலை அனுப்பி, அங்கிருந்து விண்நிலைய முத்திரை அச்சுக் குத்தப்பட்டு, மீள உங்களுக்குக் கிடைக்கச் செய்யலாம். இத் திட்டத்தை ரஷ்ய விண்ணியல் கழகம் தனது நிதி சேகரிப்பிற்காக ஆரம்பித்துள்ளது.






விண்வெளி உல்லாசப்பயணம்- கொலம்பிய விண்கல அழிவுக்குப் பின்னர் அச்சம் காரணமாக நிறுத்தப் பட்டுவிட்டது. இதை ஈடுசெய்யவே இந்தப் பெருந் தொகை முத்திரை விற்பனைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

விண்வெளிக்கான தபால் முத்திரையின் பெறுமதி 20 ஆயிரம் டொலருக்கும் 30 ஆயிரம் டொலருக்கும் இடைப்பட்டதாக இருக்கும். ஒரு கிலோ பொருள் விண்ணுக்கு அனுப்ப 10 முதல் 20 ஆயிரம் டொலர். அங்கிருந்து பொருளை மீளப்பெற 60 ஆயிரம் டொலர் கட்டணம். நல்ல வியாபாரம்.

# வாரம் ஒரு யோகாசனம்

## ஜனுராசனம்



காலகளை நேராக நீட்டியபடி தரையில் அமரவும். பின்னர், இடது முழங்காலை மடித்து இடதுபுறம் நகர்த்தவும். இடது தொடை மற்றும் கால் இவற்றின் வெளிப்புறம் தரை மீது இருக்கவேண்டும். இடது குதிக்கால் - இடது தொடைக்கு உட்புறம் ஆசனவாய்க்கு அருகில் வைக்கவும். வலது கால் முழுமையாக நீட்டியிருகக வேண்டும், நேராக இருக்க வேண்டும். வலது கால் பெருவிரலை இரண்டு கைகளின் ஆள்காட்டி நடுவிரலால் பிடித்துக்கொள்ளவும். வயிற்றுப் பகுதியை உள்ளிழுக்க வேண்டும்.



மெல்ல முன்னே குனியவும். நெற்றி வலது முழங்காலைத் தொடவேண்டும். கைமுட்டிகள் தரையைத் தொடவேண்டும். ஆசன நிலையில், இயல்பான சுவாசத்தில் இருக்கவேண்டும். செய்துமுடித்தபின், இரண்டு மூன்று முறை ஆழ்சுவாசம் செய்யவேண்டும். பத்துமுதல் 20 விநாடிகள் இரண்டு அல்லது மூன்றுமுறை செய்யலாம்.

### ஜனுராசனத்தின் நன்மைகள்

சல எரிசல் நிற்கும். சலவடைப்புத் தீரும். காய்ச்சல் வராது. அஜீரணம் தீரும். தலைப்பாரம், கண்ணெரிச்சல், வாதம், சந்து வாதம், வெள்ளைபடுதல் தீரும், பெண்களுக்கு கருப்பை சம்பந்தமான வியாதிகள் தீரும். அறுவைச் சிகிச்சை செய்தவர்கள் ஆலோசனையின் பேரில் செய்யவேண்டும்.

கற்றுத்தருபவர் - மா.மகாநேசன் (கரவெட்டி)

# குழந்தைகளுக்கு தண்டனைகளை எப்படித் தீர்மானிக்கிறீர்கள்?

(சென்ற வாரத் தொடர்ச்சி...)

பிள்ளைக்குத் தண்டனை கொடுக்கும் போது அதன் வயதிற்கேற்ப தண்டனை கொடுக்கத் தெரிந்திருக்க வேண்டும். பிள்ளையின் உணர்வு வேகத்திற்கேற்றதாக இருக்கவேண்டும். பிள்ளையின் உடல் ஆரோக்கிய நிலைக்கும், மனவளர்ச்சிக்கும் ஏற்ற தண்டனையாக இருக்கவேண்டும்.

ஒவ்வொரு பிள்ளைக்கும் கொடுக்க வேண்டிய தண்டனை மாறுபட்டதாக இருக்க வேண்டும். சிலபிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டிய தண்டனை மாறுபட்டதாக இருக்க வேண்டும். சிலபிள்ளைகள் அதிகம் பயந்த பிள்ளைகளாக இருக்கலாம். தடியைக் கையில் எடுக்கும்போதே தலைசுற்றி விழும் பிள்ளைகளும் உண்டு. அல்லது பயத்தில் சிறுநீர் கழித்துவிடும் பிள்ளைகளும் உண்டு. சிலபிள்ளைகள் தண்டனையைப்பெற ஆயத்தமாக இருப்பர்.

நாம பிள்ளைக்குத் தண்டனை கொடுக்க ஆசைப்படுவது நாம் சிறிய வயதில் தண்டனையைப் பெற்றதால் அதைத் தீர்க்க வேண்டுமென்று எமது கீழ்மனதிலிருந்த அவாவினாலேயாகும். உதாரணமாக - ஒரு ஆசிரியர் தனது வகுப்பில் பிழைவிட்ட மாணவனைத் தண்டித்துவிட்டு, கதிரையில் ஏற்றிவிட்டார். ஏற்றிவிட்டு அம்மாணவனைப் பார்த்து "நாம் படிக்கும்போது எங்களது ஆசிரியர் நான் பிழைவிட்டதும், கதிரையில் ஏற்றித் தண்டனை தந்தார். அப்படி அவர் என்னைத் தண்டித்தபடியால்தான் நான் இன்று ஆசிரியராக இருக்கிறேன். நல்லவனாக இருக்கின்றேன்" என்று கூறினாராம். இங்கே உண்மையில் நடந்தது என்ன? அன்று சின்னப் பிள்ளையாக இருக்கும்போது, ஆசிரியர் தண்டனை கொடுக்கும்போது, ஆசிரியருக்குத் திருப்பியடிக்க முடியவில்லை, ஏச முடியவில்லை,' ஆசிரியரைக் கதிரையில் ஏற்றமுடியவில்லை. இப்போது கீழ்மனத்திலுள்ள உந்துதலினால் நல்ல நோக்கத்தோடு பிள்ளைகளில் அதைச் சாதிக்கிறார் ஆசிரியர். அதாவது, கீழ்மனதில் தள்ளி வைத்ததை இப்போது மாணவர்களில் வெளிப்படுத்தினார் ஆசிரியர். இதுவே உண்மை.



"ஒருநாள் தனது மகளைத் தந்தை பட்டியால் அடித்தார். எனது அப்பாவும் இப்படித்தான் என்னைத் திருத்தினார். உங்களையும் அப்படித்தான் வளர்க்கவேணும்" என்று தந்தை கூறினர். அதுமட்டுமல்ல, தனது. ஒரு மகனைத் தண்டித்துவிட்டுத் தனது அடுத்த மகனையும், மகளையும் கூட்டிக்கொண்டுபோய் மகனைக் காட்டினார்.

"பாருங்கோ இவன் செய்த வேலையை. மூண்டு களிசான் உள்ளே போட்டிருக்கிறான்' என்றார். பிள்ளைகள் எம்மைப் பற்றி நன்கு அறிந்துவைத்திருப்பார்கள். அப்பா எப்படி அடிப்பார்? எப்போது அடிப்பார் என்றெல்லாம் அறிந்து வைத்திருப்பர்.

ஆகவே, தண்டனை கொடுக்கும். போது பிள்ளைக்கேற்ப கொடுக்க வேண்டும். பிள்ளைகள் - பெற்றோரை நன்கு கவனித்து வைத்திருப்பதற்கு மற்றொரு உதாரணம் - பிள்ளைகள் தாம் விளையாடும்போது சிறுவயதில் "நான் அம்மா நீ அப்பா" என்று கூறி அப்பா, அம்மா, சொல்வதுபோல், செயற்படுவதுபோல் செய்துகாட்டுவர். அம்மா - அப்பா ஏசுவதைப் போன்று ஏசுவர். ஆகவே, பிள்ளைகள் எம்மை நன்றாகக் கவனித்து வைத்திருப்பர் என்பதை மனதிறகொண்டு பிள்ளைக்கேற்ற விதத்தில் தண்டனை கொடுக்கவேண்டும். சிலர் பயப்படுவார்கள், சிலர் நடுங்குவார்கள், சிலர் தண்டனைக்கு ஆயத்தமாக இருப்பர். அவர்களுக்கேற்ற தண்டனை கொடுக்கப் பெற்றோர் பழகியிருக்கவேண்டும்.

நாம் கொடுக்கும் தண்டனையால் பிள்ளை தனது வாழ்வில் பாடம் கற்கக்கூடிய தண்டனையாக இருக்கவேண்டும். தனது வாழ்வைத் திருத்திக்கொள்ள, சரிசெய்து கொள்ளக்கூடிய தண்டனையாக இருக்கவேண்டும். உங்கள் வீட்டில் உங்களது பிள்ளை பந்து அடித்து விளையாடுகிறது. வீட்டுக்குள் விளையாட வேண்டாம் என்று நீங்கள் பிள்ளைக்குக் கூறுகிறீர்கள். கண்ணாடி உடைந்துவிடும் என்று கூறினீர்களென வைத்துக்கொள்ளுங்கள். இருப்பினும் கண்ணாடி உடைந்து விட்டதென வைத்துக் கொள்ளுங்கள். பிள்ளைக்குத் தண்டனை கொடுக்கவேண்டும். எப்படித் தண்டிப்பது? பிள்ளையைக் கூப்பிட்டுப் "புதிதாகக் கண்ணாடி போடவேண்டும். அதனால், பாடசாலைக்குப் போகும்போது உங்கள் செலவுக்குத் தரும் பணத்தில் சிறுதொகையை ஒதுக்கினால், அப்பாவும் காசுபோட்டுக் கண்ணாடி வாங்கலாம்" என்று பிள்ளைக்குக் கூறினால் - பிள்ளை தனது வாழ்விலே பாடத்தைக் கற்றுக்கொள்கிறது.

பிள்ளைக்குத் தண்டனை கொடுப்பதற்கு முன்பு- அம்மாவும், அப்பாவும் - பிள்ளைக்குக் கொடுக்க இருக்கும் தண்டனைபற்றி ஒரு மனப்பட்டு இப்படித்தான் இத்தண்டனையைக் கொடுக்கவேண்டும் என்று இருவரும் சம்ம திக்கவேண்டும். தண்டனையைக் கொடுக்கும்போது இருவரும் தண்டனையைப்பற்றி இருவிதமான கருத்தைக் கொண்டிருப்பது பிழையாகும். *(தொடரும்....)*

- எஸ்.ஜே. யோகராஜா

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு.

- *திருக்குறள்.*

# நமது நோக்கு

## அனுமதி மறுப்பும் அவமதிப்பும் !

உலகளவில் ஊடகவியலாளர்கள் சமூகத்தின் மிகச் சிறந்த கண்காணிப்பாளர்களாகவே போற்றப்படுகின்றனர்.

மக்களுக்குச் செய்திகளையும், தகவல்களையும் தருவதோடு மட்டுமல்லாது - சமூகத்தினை வழிநடத்துபவர்களாக, கருத்துக்களை உருவாக்குபவர்களாக, உருவாக்கும் கருத்துக்கள் வழியே சமூகத்தை வழிச் செலுத்துபவர்களாக ஊடகவியலாளர்களின் பணி முக்கியத்துவம் உடையதாகின்றது.

நல்லவற்றை வெளிக்கொண்டுவருபவர்கள் என்றுமட்டுமல்லாது - சமூகத்தில் நடக்கும் அநீதிகளை, கொடுமைகளை, ஒடுக்குமுறைகளை சுட்டிக்காட்டி - சமூக இயங்கியலை, அதன் பொறிமுறையை - சரியான திசையில் கொண்டு செல்லவும் ஊடகவியலாளர்கள் அரும்பணியாற்றுகின்றனர்.

இதைவிட - நவீன உலகில் ஊடகவியலாளர்களின் சேவை - அபிவிருத்தி சார்ந்த நோக்கில் முதன்மைப் படுத்தப்பட்டு - அபிவிருத்திக்கான தொடர்பாடல் (Development communication) என்ற விடயத்தை சர்வதேசம் மிக அவசியமானதாக்கிக் கொண்டுள்ளது.

வறுமை, இயற்கையழிவுகள், போர், தொற்றுநோய்கள், மூடநம்பிக்கைகள் என இன்னோரன்ன சமூகப்பாதிப்புக்களிலிருந்து மக்களை விடுவித்து - அவர்களுக்கான அபிவிருத்தியைத் திட்டமிடுவதிலும், அந்த அபிவிருத்திப் பணிகளை மக்களிடம் எடுத்துச்செல்வதிலும், மக்களிடம் சென்றடைந்த செய்திகளுக்கான பின்னூட்டலை(Feed back) திட்டஉருவாக்குநர்களிடம் மீண்டும் எடுத்துவரவும் ஊடகவியலாளர்களின் சேவை அத்தியாவசியமானது என்பதை சர்வதேசமே ஏற்றுக்கொண்டிருக்கிறது.

ஐக்கிய நாடுகளின் புதிய நோக்கிலான அபிவிருத்திப் பணிகளுக்கு - ஊடகங்களின், ஊடகவியலாளர்களின் தேவை - முன்னணிக் காரணிகளில் ஒன்றாக வரையறுக்கப்பட்டிருக்கிறது.

இப்படியான நிலையில் - யாழ்.செயலகத்தில் நடைபெற்ற - மக்களுக்கான அடிப்படைப் பிரச்சினைகளை ஆராயும் மாநாட்டில், அதுவும் பிரதமரின் செயலரே நேரில் வந்து கலந்தாய்வில் ஈடுபட்டபோது - அங்கு பத்திரிகையாளர்களை அனுமதிக்காததும், பத்திரிகையாளர்கள் அவமதிக்கப்பட்டிருப்பதும் - உலகநடைமுறையும், மக்களுக்கான அபிவிருத்தி பற்றியும் தெரியாத - உணரத் தலைப்படாத மிகமோசமான நடவடிக்கையாக அமைந்துள்ளது.

பிரதமரின் செயலர் பிரட்மன் வீரக்கோன் கலந்துகொண்ட கூட்டம் ஒன்றும் இரகசியமான கலந்துரையாடலல்ல. யாழ்.மாவட்டப் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும், அரசாங்க அதிகாரிகளும் பங்கேற்ற - யாழ். மாவட்டத்தில் வசிக்கும் மக்களது அவசியமான பிரச்சினைகள் பற்றியும், அரசாங்கம் மேற்கொள்ளவிருக்கின்ற திட்டங்கள் தொடர்பானதுமான மக்கள் நலன்களைக் கருத்திற் கொள்ளத்தக்க சந்திப்பே அது.

இவ்வாறானதொரு கூட்டத்தில் - சமூகத்தின் கண்களாக விளங்கக்கூடிய பத்திரிகையாளர்களை அனுமதிக்க மறுத்தமை - ஒன்றில், விஷயம் தெரியாதவர்களின் வேலையாக இருக்கக்கூடும் அல்லது வேண்டுமென்றே திட்டமிட்டுச்செய்த பணியாகவே இருக்கமுடியும்.

இவற்றில் எது காரணமாக இருந்தாலும் - அது யாழ். அரச செயலகத்திற்கு அழகானதல்ல.

அதுவும் - பிரதமரின் செயலர் பிரட்மன் வீரக்கோன் - அரச நிர்வாகங்களின் வெளிப்படைத் தன்மை பற்றியும், மக்களுக்கு அரசின் செயல்கள் தெரியவேண்டியதன் அவசியம் தொடர்பாகவும், விளக்கிக் கொண்டிருந்தபோது பத்திரிகையாளர்களை அவமதிக்குமாப்போல, புகைப்படம் எடுக்க விளைந்தவர்களை செயலக உயரதிகாரி ஒருவர் வெளியேறச் சொன்னமை - பிரட்மன் வீரக்கோனுக்கு முன்பாகவே, அவரது கருத்துக்களை குறிப்பிட்ட உயரதிகாரி காலில் தூக்கிப்போட்டு மிதித்துவிட்டமைக்கு ஒப்பானதாகும்.

சர்வதேச மாநாடுகளிலேயே பத்திரிகையாளர்களுக்கும், புகைப்படப்பிடிப்பாளர்களுக்குமான உரிய கௌரவம் அளிக்கும் இருக்கைகள், புகைப்படப் பிடிப்புக்கான அனுமதி என்பன வழங்கப்பட்டு வருகின்றபோது - செயலகத்தில் நடந்த கூட்டத்தில் பத்திரிகையாளர்களை அனுமதிக்காததும், அவமதித்ததும் சிறுபிள்ளைத்தனமான செய்கையாகவேபடுகின்றது.

எனவே - இது தொடர்பில் யாழ்.அரசாங்க அதிபர் - கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு- மக்களுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் இடையிலான தொடர்பாடலின் மையமான பத்திரிகையாளர்களுக்கு உரிய கௌரவத்தைப் பெற்றுத்தரவேண்டுமென்றே, அனைத்துப் பத்திரிகையாளர்களும் எதிர்பார்க்கின்றனர்.

அதிலும் - இனிவருங்காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளிலும், அபிவிருத்திசார் செயற்பாடுகளிலும் - பத்திரிகைகள் வகிக்கக்கூடிய தொடர்பாடல் பங்கினை ஆரோக்கியமானதாகவும், முன்னேற்றகரமானதாகவும் பேணிக்கொள்ள யாழ்.அரச அதிபர் முன்வருவாரென்றே பத்திரிகையாளர்கள் நம்புகின்றனர்.

அரசாங்க செயற்பாடுகளின் வெளிப்படைத்தன்மை (Transparency) வலியுறுத்தப்படும் இன்றைய காலகட்டத்தில் - அதனை நடைமுறைச் சாத்தியமானதாக்க யாழ். அரச செயலக அதிகாரிகள் செயற்படுவார்களா என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

# அடிப்படை மருத்துவ வசதிகளின்றி மூதூர் பகுதியிலுள்ள கிராமங்கள்

## சுகாதார அமைச்சருக்கு துரைரட்ணசிங்கம் எம்.பி கடிதம்

(திருகோணமலை)

மூதூர் பகுதியில் உள்ள கிராமங்கள் அடிப்படை மருத்துவ வசதிகளின்றி இருப்பதாகவும், உடனடியாக இப்பகுதிக்கு மருத்துவ வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கோரி திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் - சுகாதார அமைச்சர் பி.தயாரத்னவுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

இந்த அரசாங்கம் பதவியேற்றுப் பதினாறு மாதங்கள் கடந்து விட்டன. ஆனால், மூதூர் பகுதியிலுள்ள கிராமங்களில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படவில்லை.

ஈச்சிலம்பற்றையிலுள்ள வைத்தியசாலை மருத்துவர் இன்றி மூடப்பட்ட நிலையிலுள்ளது. இதுபோல மணற்சேனை, மாவடிச்சேனை, இறகந்தை, முகத்துவாரம் மருத்துவ நிலையங்களும் செயற்பட முடியாத நிலையிலுள்ளன. இவற்றுக்கு ஒழுங்கான கட்டட வசதிகளும் இல்லை.

கிளிவெட்டி, சம்பூர், தோப்பூர் ஆகிய இடங்களிலுள்ள மருந்தகங்களில் மருந்துத் தட்டுப்பாடு நிலவுகின்றது. இவ்வாறு மூதூர் பகுதியிலுள்ள வசதியீனங்கள், குறைபாடுகளைக் களைய உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் சுகாதார அமைச்சர் பி.தயாரத்னாவிடம் - நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# புலிகளின் பேச்சு விலகல் முடிவு; வெளிநாட்டு முதலீடுகளைப் பாதிக்கும்!

## வெளிவிவகார அமைச்சர் ரிரோன்

சமாதானப் பேச்சுக்களிலிருந்து தற்காலிகமாக விலகிக் கொளவதாகப் புலிகள் எடுத்துள்ள முடிவு வெளிநாட்டு முதலீடுகளைப் பாதிக்கும் என்று வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சமாதானப் பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடியான சூழல் நீங்கி விரைவில் சுமுகமான நிலை ஏற்படும்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற பேச்சுக்களை முறித்துக்கொண்டதுபோல புலிகள் இம்முறை நடந்து கொள்ளாதது மகிழ்ச்சி தருகிறது. தாங்கள் மீண்டும் போரைத் தொடங்குவதாக இல்லை என அவர்கள் உறுதியளித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பௌத்த பிக்குகளின் உருவத்துடன் ஐந்து ரூபா நாணயங்கள் வெளியீடு

(கொழும்பு)

இலங்கையில் 'சியாம் நிக்காய' தோற்றுவிக்கப்பட்டு 250 வருடங்கள் நிறைவு பெறுவதையொட்டி இரு பௌத்த பிக்குகளின் உருவங்கள் பொறிக்கப்பட்ட ஐந்து ரூபா நாணயங்களை வெளியிட அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

வண. சரணங்கார தேரோ மற்றும் தாய்லாந்தைச் சேர்ந்த வண. உபாலி தேரோ ஆகியோரின் உருவங்கள் பொறித்த ஐந்து ரூபா நாணயங்களே வெளியிடப்படவுள்ளன.

இந்த நாணயங்கள் முன்னர் வெளியிடப்பட்ட ஐந்து ரூபா நாணயங்களின் அதே வடிவமைப்பையும், அளவையும் கொண்டிருக்கும்.

இத்தகவலை மத்திய வங்கியின் நாணயப்பிரிவுத் தலைவரான சி.எம்.ஆரியரட்ண தெரிவித்தார்.

# புலிகளுக்கு எதிராகப் போரிட தனியான தற்கொலைப் படை

## சிஹல உறுமய அமைக்கிறது

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் ஈடுபடுவதற்காக 'சிங்கள தற்கொலைப்படை' என்ற அமைப்பைத் தாம் இன்று தோற்றுவிக்கவுள்ளதாக 'சிஹல உறுமய' நேற்று வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, தமிழீழ விடுதலைப் புலிகள் தமது போரியல் ஆற்றலை, நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றனர்.

ஆனால், இலங்கை இராணுவம் இதற்கேற்றவாறு தமது போரியல் ஆற்றலை வளர்த்துக் கொள்ளவில்லை.

இதனாலேயே 'சிஹல உறுமய' தற்கொலைப்படையொன்றை அமைத்துக்கொள்ள தீர்மானித்திருக்கிறது. புலிகள் வந்து தாக்குதல் நடத்தும்வரை பார்த்துக்கொண்டிருக்காமல் இந்த தற்கொலைப்படையினர் தாக்குதலில் ஈடுபடுவர் என்றும் 'சிஹல உறுமய' மேலும் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

# பேச்சுக்களைப் பற்றித் தீர்மானிக்க புலிகளுக்கே பூரண உரிமையுண்டு!

## புதிய ஜனநாயகக்கட்சி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள், போராட்டங்கள், பேச்சுவார்த்தைகள், அரசியல் தீர்வு என்பன பற்றித் தீர்மானிக்கும் உரிமை தமிழ்மக்களுக்கு உரியதேயன்றி, அமெரிக்காவிற்கோ அதன் இலங்கைக்கான தூதுவர் ஆஷ்லி வில்ஸுக்கோ உரியதொன்றல்ல எனப் புதிய ஜனநாயகக்கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் - விடுதலைப்புலிகள் இயக்கம் தற்காலிகமாகப் பேச்சுவார்த்தையிலிருந்து விலகிக் கொள்ளும் முடிவிற்கு வந்தமை பற்றி அமெரிக்கத் தூதுவர் அண்மையில் வெளியிட்டுள்ள கருத்துக்கள் - தமிழ்மக்கள் அனைவரையுமே சுட்டுவிரல் காட்டி எச்சரிப்பதாகவே அமைந்துள்ளது. இதனைப் புதிய ஜனநாயகக் கட்சியின் அரசியற் குழு மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

அதேவேளை, அமெரிக்காவின் இத்தகைய அச்சுறுத்தலுக்கு எதிராகத் தமிழ் மக்கள் மிகுந்த விழிப்புடனும், தூரநோக்குடனும் இருந்து தமது அரசியல் முடிவுகளை மேற்கொள்வது அவசியம் என்பதையும் கட்சி சுட்டிக்காட்டுகின்றது

இந்நாட்டின் தமிழ் மக்கள் பேரினவாத பெரு முதலாளித்துவ ஒடுக்குமுறையின் கீழ் வாழமுடியாத சூழலிலேயே ஆயுதப் போராட்டப்பாதையைத் தேர்ந்தெடுத்தனர். அதன் விளைவாகவே இன்றைய பேச்சுவார்த்தை அரசியற்தீர்வு காண்பது என்ற நிர்ப்பந்த முடிவுக்கு ஆளும் அரசாங்கம் வரவேண்டியதாயிற்று.

அன்றும், இன்றும் பேரினவாத ஒடுக்குமுறையின் பக்கம் நின்று தனது ஏகாதிபத்திய நோக்கங்களை அடைந்து வந்த அமெரிக்கா, பேச்சுவார்த்தையின் பின்னாலும் நின்று பேரினவாத பெருமுதலாளித்துவத்திற்கு வக்காலத்து வாங்கித் தமிழ்மக்களை எச்சரித்து அச்சுறுத்த நிற்கிறது.

பேச்சுவார்த்தையிலிருந்து தற்காலிகமாகவோ அன்றி நிரந்தரமாகவோ விலகிக்கொள்ளும் தீமானத்தை எடுப்பதற்கு விடுதலைப் புலிகளுக்கு பூரண உரிமை உண்டு. அது சரியானதா? அன்றி தவறானதா? என்பதைத் தீர்மானிக்கும் உரிமை தமிழ்மக்களுக்கு உரியதேயன்றி - அமெரிக்காவிற்கோ அன்றி அமெரிக்கத் தூதுவர் ஆஷ்லி வில்ஸுக்கோ உரியதொன்றல்ல.

அமெரிக்கத் தூதுவரின் அச்சுறுத்தும் கருத்துக்களின் பினனால் ஆதிக்க மிரட்டலும், அடிபணியவைக்கும் நோக்கங்களுமே படிந்திருக்கின்றன. கோசோவோ முதல் தற்போதைய ஈராக் வரையான நேரடி ஆக்கிரமிப்புத்தொனி அமெரிக்கத் தூதுவரின் அறிக்கையில் நிறைந்திருப்பதையே காணமுடிகின்றது.

ஆதலால் தமிழ்பேசும் மக்கள் அனைவரும் அமெரிக்காவின் அதட்டல், மிரட்டல் பற்றிப் புரிந்துகொள்ளல் வேண்டும் எனக் கட்சி சுட்டிக்காட்டுகின்றது எனக்குறிப்பிட்டப்பட்டுள்ளது.

# வலி- மேற்கு கிராமங்களில் தேவை மதிப்பீடுகள் ஆரம்பம்

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சகல கிராமங்களுக்கும், செயலகத்திட்டமிடல் பகுதியினர் நேரடியாகச் சென்று கிராமத்தின் உடனடித் தேவைகளையும், நீண்டகாலத் தேவைகளையும் மதிப்பீடு செய்து வருகின்றனர்.

உதவிப் பிரதேசசெயலர் கே.தர்மராசா தலைமையில் மதிப்பீடுகள் இடம்பெற்றுவருகின்றன.

இதன் அடிப்படையில் மூளாய் பகுதிக்குரிய தேவை மதிப்பீடுகள் இன்று காலை 10 மணிக்கு, மூளாய் பிள்ளையார் ஆலயத்தில் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் கிராம அலுவலர், சமுர்த்தி அலுவலர், சமூக மட்ட அமைப்பு பிரதிநிதிகள், மீள்குடியமர்ந்த மக்களின் பிரதிநிதிகள், கிராமிய புனர்வாழ்வு நல்லிணக்கக்குழு உறுப்பினர்கள் ஆகியோரைத் தவறாது கலந்துகொள்ளுமாறு உதவிப்பிரதேச செயலாளர் கேட்டுள்ளார். (118)

# இருவேறுபட்ட பொருளாதாரங்கள் இணையும் சீனா-ஹொங்கொங் அதிகாரப் பகிர்வு முறை

## சுயநிர்ணயம் ஒரு பார்வை

### பகுதி ~ 31

ஐந்து விசேட அம்சங்களின் அடிப்படையில் SAR விசேட நிர்வாகப் பிராந்தியமாக ஹொங்கொங் இயங்குகின்றது.

அவையாவன -

☆ ஹொங்கொங்கின் வெளியுறவும், பாதுகாப்புக் கொள்கையும் தவிர அனைத்திற்கும் SAR பொதுவாக இருக்கும்.

☆ SAR முற்றுமுழுதாகக் ஹொங்கொங் பிரஜைகளால் நிர்வகிக்கப்படுவதாகக் காணப்படும்.

☆ பிரித்தானிய குடியேற்றகாலத்திலிருந்த குடியியல் மற்றும் குற்றவியல் சட்டங்கள் தொடர்ந்தும் அமுல்படுத்தப்படும்.

☆ சீனாவிற்கும் - ஹொங்கொங்கிற்கும் இடையில் புதிய சுதந்திரமான வர்த்தக, பொருளாதார, கலாசார நடவடிக்கைகள் ஏற்படுத்தப்படும்.

☆ ஹொங்கொங், சீனாவின் விசேட நிர்வாகப் பிராந்தியமாக மாறியதன் பின்னரும், ஹொங்கொங்கில் இருக்கும் பிரித்தானிய நலன்கள் பாதிப்படையாது என்ற உத்தரவாதம்.

ஆகிய ஐந்து முக்கிய அம்சங்கள் காணப்படுகின்றன.

இவ்வாறு சீனா-ஹொங்கொங்கிற்கு இடையிலான அதிகாரப் பகிர்வு - One Country - two Systems- "இரண்டு முறைமைகளை உள்ளடக்கிய ஒருநாடு" என்ற அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட அதிகாரப்பகிர்வு முறையைக் கொண்டதாகும். எதிர்காலத்தில் சீனாவிற்கு - தாய்வானுடனான சமரசத் தீர்வுகளுக்கும் இத்தீர்வு உதவலாம்.

ஆனால், ஹொங்கொங்கினைப் பொறுத்தவரையில் உலகிலேயே மிகப்பெரிய வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபடும் எட்டாவது நாடாக அது விளங்குகின்றது.

இதனால், ஹொங்கொங்கைத் தன்னுடன் இணைத்துக் கொண்டமையானது, சீனாவின் வெளிநாட்டு வர்த்தகத்திற்கும், தொழில்நுட்ப அபிவிருத்திக்கும் பாரிய உந்து சக்தி என்பது வெளிப்படை.

இன்று, சீனா தனது வருடாந்த பொருளாதார அபிவிருத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சி வீதத்தினை இரட்டை இலக்கங்களாகப் பேணுவதன் இரகசியமும் ஹொங்கொங்கின் தொழில்நுட்ப அறிவும், அனுபவமும் சீனாவின் மூலவளத்துடன் ஒன்றிணைந்தமையே என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இதேவேளை, கடந்த ஐந்து வருடங்களாகக் ஹொங்கொங் பிரதேசத்தில் சீனாவின் முதலீடு வருடத்திற்கு 40 சதவீதத்தால் முன்னைய ஆண்டுகளை விட அதிகரித்து வந்துள்ளதையும் நாம் இங்கு உன்னிப்பாக அவதானிக்க வேண்டும்.



உலக வர்த்தக மையத்துடனான சீனாவின் ஒப்பந்தம்

#### சீனாவின் சர்வதேச நிதி மையமாக ஹொங்கொங்

சீனா இன்றைய உலகமயமாதல் போக்கிற்கும் வர்த்தக விஸ்தரிபிற்கும் ஏற்றவகையில் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள முயலுகின்றது. இதற்காக அமெரிக்க டொலர்களை இலகுவான முறையில் தான் சம்பாதித்துக்கொள்வதற்கு ஹொங்கொங்கினைச் சர்வதேச நிதிமையமாகச் செயற்பட வைத்துள்ளது.

இதன் பிரகாரம் - சீனாவுடன் ஹொங்கொங் இணைவதற்கு முன்னர் இருந்த நிதி முகாமைத்துவ முறைமையையே தொடர்ந்து ஹொங்கொங்கைப் பின்பற்ற சீனா அனுமதித்துள்ளது.

மககள் சீன வங்கிக்கும்- ஹொங்கொங் நிதி முகாமைத்துவ அதிகார சபைக்கும் இடையிலான ஒத்துழைப்பும், கூட்டுறவும் மிகநல்ல முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இதனடிப்படையில் ஹொங்கொங் நிதி முகாமைத்துவ அதிகாரசபை தற்துணிவின் அடிப்படையில் செயலாற்றுவதற்குப் பூரண சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் மக்கள் சீன வங்கிக்கு - நிதியியல் தொடர்பான விடயங்களில் மேற்பார்வை செய்யும் அதிகாரம் மட்டுமே காணப்படுகின்றது.

எவ்வாறு நிதி நிர்வாகம் தொடர்பாகக் கூடுதலான அதிகாரம் அளித்திருக்கின்றதோ, அதேபோல ஹொங்கொங்கினைச் சுதந்திரக் கப்பற் துறைமுகமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. இதன்மூலம் சந்தைச் சக்திகளுக்குச் சர்வதேச ரீதியில் ஊக்கமளித்து; தனக்கு வேண்டிய வெளிநாட்டு வர்த்தகத்தினைச் ஹொங்கொங் மூலம் சீனா நிறைவேற்றிக் கொள்கிறது.

இவ்வாறு ஏற்றுமதி - இறக்குமதி வர்த்தகத்தினை மேற்கொள்வதற்குச் சுதந்திர வர்த்தகத்தினையும், அத்தோடு இணைந்த துறைமுக வசதிகளையும் ஹொங்கொங் பேணுகிறது. அத்துடன், ஹொங்கொங்கின் புவியியல் அமைவிடம்- குறிப்பாகத் தூரகிழககு நாடுகளுக்கான வர்த்தகத்தில் ஈடுபட மிகவும் வசதி படைத்ததாக உள்ளது.

இதனால், கப்பல் போக்குவரத்து மற்றும் கடல் வாணிபத்தினையும் விட, ஆகாயப் போக்குவரத்திற்கும் அதன்மூலமான வாணிபத்திற்கும் இன்று ஹொங்கொங் - சீனாவிற்குப் பாரிய உதவிகளை வழங்குகிறது. இதன்மூலம் தன்னிடமுள்ள பாரிய



சீனாவின் விமான உற்பத்தி

பொருளாதாரப் பலத்தினையும் சீனாவிற்கு ஹொங்கொங் வழங்கி வருகிறது.

இதனால், சீனாவின் பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு - அதாவது, சோசலிஸ பொருளாதார முறையிலிருந்து - முதலாளித்துவ சந்தைப் பொறிமுறைகளுக்கு உட்பட்ட மறுசீரமைப்பிற்கு ஹொங்கொங் மிகவும் காத்திரமான பங்காளியாகத் தன்னைச் சீனாவுடன் இணைத்துள்ளது.

சோசலிஸப் பொருளாதார முறைமையும், முதலாளித்துவ பொருளாதார முறைமையும் ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் இணைந்த வகையிலான பொருளாதாரக் கட்டமைப்பினை இன்றைய சீனா கொண்டிருக்கிறது.

**வேலும்மயிலும் சேந்தன்**

இதனாலேயே இன்று காணப்படும் உலகளாவிய பொருளாதார மந்தத்திலும், சீனாவின் வருடாந்த பொருளாதாரம் அபிவிருத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சியென்பன இரட்டை இலக்கத்தில் காணப்படுகின்றன.

இன்று காணப்படும் உலக ஒழுங்கினை மாற்றியமைக்கும் வல்லமை சீனாவிற்கே உண்டு எனச் சில கற்றறிவாளர்கள் எதிர்வு கூறுகின்றனர். அவ்வாறு உலக வல்லரசுகளில் ஒன்றாகச் சீனா உருவாகுவதற்குக் ஹொங்கொங் - சீனா இணைவே பிரதான காரணமாக அமையும் என்றும் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறு, சீனாவிடம் ஹொங்கொங் புதியதொரு பாணியிலான அதிகாரப்பகிர்வு முறையில் ஒன்றிணைந்திருப்பது இன்று உலகில் காணப்படும் அதிகாரப்பகிர்வு முறைகளுக்கெல்லாம் புதுமாதிரியாகத் தென்படுகிறது.

அதாவது, வெவ்வேறு வரலாற்றுக் காரணங்களால் இரண்டு வித்தியாசமான, ஒன்றுக்கொன்று முரணான பொருளாதாரக் கட்டமைப்பினைக் கொண்ட பிரதேசங்கள் - விசேடமான அதிகாரப்பகிர்வு முறைகள் கொண்ட ஒரு நாடாக அமைந்திருப்பதுவே அதுவாகும்.

இன்று உலகிலுள்ள அதிகாரப் பகிர்வு முறைகளை நோக்கும் போது, வித்தியாசமான பொருளாதாரக் கட்டமைப்புகளைக் கொண்டமைந்த இரண்டு பிரதேசங்கள் ஒன்றுக்கொன்று கொண்டும், கொடுத்தும் அமையும் அதிகாரப்பகிர்வு முறையாகச் சீனா - ஹொங்கொங் காணப்படுகின்றமை அதன் சிறப்பியல்பாகும்.

இதேமாதிரியான அமைப்பு முறையிலான அதிகாரப்பகிர்வு கனடாவின் ஏனைய மாநிலங்களுக்கும், கியூபெக்கிற்கும் இடையில் காணப்பட்டபோதும் சீனா-ஹொங்கொங்போல் இரண்டு பிரதேசங்களுக்கும் ஒன்றிலொன்று தங்கியிருக்கும் நிலையில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

*(பிரதி செவ்வாய் தொடரும்)*

# அரசாங்க சமாதானச் செயலகத்தை மறுசீரமைப்புச் செய்ய நடவடிக்கை!

(கொழும்பு)

சமாதானச் செயலகத்தை அரசாங்கம் மறுசீரமைப்புச் செய்வதற்குத் தீர்மானித்திருப்பதாகத் தெரிய வருகின்றது.

விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளிலிருந்து தற்காலிகமாக விலகிக்கொள்ளத் தீர்மானித்ததைத் தொடர்ந்தே அரசாங்கம் தனது சமாதானச் செயலகத்தை மறுசீரமைக்க முடிவுசெய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மறுசீரமைப்புத் திட்டத்துக்மைய - சமாதானச் செயலகத்தின் பணிகள்- மறுசீரமைப்புச் செய்யப்படவுள்ளன. அத்துடன், செயலகத்தில் பணியாற்றுவோருக்கு மாற்றங்கள் வழங்கப்படவுள்ளன.

இனிவரும் காலங்களில் அரசின் சமாதானச் செயலகம் - அரசியல் பணிகளை மட்டுமே மேற்கொள்ளும். மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்குத் தனியான அமைப்பு ஒன்றை அமைக்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த மாற்றத்தின் ஒரு கட்டமாகவே சமாதானச் செயலகப் பணிப்பாளராகவுள்ள பேர்னாட் குணதிலகவுக்கு, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பதவி வழங்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

# மதுரையில் மாணவி படுகொலை கல்லூரி உரிமையாளர் கைது!

(மதுரை)

மதுரை- அண்ணா நகரில் வைத்து திருகோணமலையைச் சேர்ந்த கல்லூரி மாணவி ஒருவர் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக ஐந்து பேரைத் தமிழகப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

திருகோணமலையைச் சேர்ந்த மயூரினி என்ற 19 வயது மாணவி, மதுரையிலுள்ள தனியார் கல்லூரியொன்றில் படித்துவந்தார். மாணவி தங்கியிருந்த வீட்டிலிருந்து கடந்த வியாழக்கிழமை இவரது சடலம் - தமிழகப் பொலிஸாரால் சிதைவடைந்தநிலையில் மீட்கப்பட்டது.

இதையடுத்து மோப்பநாய்களின் உதவியுடன் விசாரணைகளில் இறங்கிய தமிழகப் பொலிஸார் - ஐந்து பேரைக் கைதுசெய்து தடுத்து வைத்துள்ளார்கள். இவர்களில் மயூரினி கல்விகற்ற கல்லூரியின் உரிமையாளரும் அடங்குவதாகத் தெரிய வருகிறது.

மாணவி மயூரினியிடமிருந்து நகைகள் மற்றும் பணம் என்பவற்றை அபகரிக்கும் நோக்குடன்தான் இந்தக் கொலை இடம்பெற்றதாகவும் தமிழகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# தேசிய பாடசாலைகளின் தெரிவில் அரசியல் தலையீடுகள் இருந்தது!

## கல்வி அமைச்சர் கருணாசேன கொடிதுவக்கு

(கொழும்பு)

தேசிய பாடசாலைகளைத் தெரிவுசெய்வதில் கடந்த காலங்களில் தவறுகள் இடம்பெற்றிருப்பதாகவும், இதில் அரசியல் தலையீடுகள் காணப்பட்டதாகவும் கல்வி அமைச்சர் கருணாசேன கொடிதுவக்கு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் தேசிய பாடசாலைகளைத் தெரிவுசெய்வதில் ஏற்பட்டிருந்த தவறுகளால் - இனிவரும் காலங்களில் தேசிய பாடசாலைகளைத் தெரிவுசெய்வதில் தெளிவான கொள்கை வகுக்கப்படவுள்ளது.

அரசியற்காரணங்களுக்காகத் தேசிய பாடசாலைகளாகப் பிரகடனப் படுத்தப்பட்ட பாடசாலைகளின் செயற்பாடுகள் காலப்போக்கில் பாதிக்கப்படும். அத்துடன்- கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் ஒரு தேசியப் பாடசாலைகூட பிரகடனப்படுத்தப்படவில்லை எனவும் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு மேலும் தெரிவித்தார்.

# எதிர்க்கட்சிகளை அடக்க அவசரகால நிலைப் பிரகடனம்

## அரசாங்கம் ஆலோசனை செய்கிறது

(கொழும்பு)

நாட்டில் மீண்டும் அவசரகால நிலையைப் பிரகடனம் செய்வது தொடர்பாக அரசாங்கம் ஆலோசனைகளைச் செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்க்கட்சிகள்- அரசாங்கத்துக்கு எதிராக மேற்கொண்டுவரும் எதிர்ப்பு நடவடிக்கைகள், அடுத்த வாரங்களில் தீவிரமடையலாம் என்ற புலனாய்வுத் தகவல்களையடுத்தே, அவசரகால நிலையைப் பிரகடனப் படுத்துவது குறித்து ஆராயப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை நடத்தவும், ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியை மேற்கொள்ளவும் எதிர்க்கட்சிகளான ஜே.வி.பியும், பொ.ஐ.முவும் திட்டமிட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சமாதான முயற்சிகளைச் சீர்குலைக்கமுனையும்- எதிர்க்கட்சிகளின் இந்தச் சதி முயற்சியை முறியடிப்பதற்கு அவசரகால நிலைப் பிரகடனம் அவசியம் என அரசாங்கம் கருதுவதாகவும் தெரியவருகிறது.






ஆனையிறவு மற்றும் தீச்சுவாலை முறியடிப்புச் சமர் வெற்றிப்பெருவிழாவில் தலைவர் பிரபாகரனுக்கு சமர்ப்பிப்பதற்கான வெற்றிக்கேடயம் யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டுசெல்லப்பட்ட வாகனத்தை முதலாவது படத்திலும், நிகழ்வில் ஈகச்சுடரேற்றிய யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியை இரண்டாவது படத்திலும், பொதுச்சுடரை தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்கத் தலைவர் சிவமகாராசா ஏற்றுவதை மூன்றாவது படத்திலும், வெற்றிக்கேடயத்தை தொடரோட்டம் மூலம் கொண்டுசென்ற இளைஞர்களை நான்காவது படத்திலும் காணலாம்.

# சர்வதேச விண்வெளி நிலையத்துடன் 'சோயுஸ்' விண்கலம் இணைந்தது!



இணைவு!



இனி எழுவர்!



மகிழ்ச்சி!!

விண்வெளியில் தரித்திருக்கும் சர்வதேச விண்வெளி நிலையத்தை - ரஷ்யாவின் சோயுஸ் விண்கலம் சென்றடைந்திருக்கிறது.

ரஷ்யாவின் புவிப் பரப்பிலிருந்து 400 கிலோமீற்றர்கள் உயரத்தில் சர்வதேச விண்வெளி நிலையத்தில் - இந்த இணைப்பு நடந்தது.

ரஷ்யாவின் கசகஸ்தான் பகுதியில் இருந்து கடந்த சனியன்று கிளம்பிய சோயுஸ் விண்கலம் - ரஷ்யா மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த இரு விண்வெளி வீரர்களைக் கொண்டுசென்றது.

அமெரிக்காவின் 'கொலம்பியா' விண்கலம் விண்வெளிக்குச் சென்று, தரையிறங்கச் சில நிமிடங்களே இருக்கும்போது வெடித்துச் சிதறியதற்குப் பின்னர் - மனிதர்களை ஏற்றிக்கொண்டு பூமிப் பந்தில் இருந்து புறப்பட்ட முதலாவது விண்கலம் சோயுஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

சோயுஸ், சர்வதேச விண்வெளி நிலையத்தைச் சென்றடைந்ததும் - ரஷ்ய விண்வெளி அதிகாரிகள் தமது வாழ்த்துக்களை புவியில் இருந்து தெரிவித்தனர்.

சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கியிருக்கும் அமெரிக்க விண்வெளி வீரர்களான கெனத் பவர்சக்ஸ், டொனால்ட் பெற்றிக், ரஷ்ய விண்வெளி வீரரான நிகோலய் புடாரின் ஆகியோருடன் - சோயுஸில் சென்ற ரஷ்யரான மலென்சென்கோல் மற்றும் அமெரிக்கரான லூ ஆகியோரும் தற்போது இணைந்திருக்கின்றனர்.

சோயுஸ் விண்கலம் - சர்வதேச விண்வெளி நிலையத்துடன் இணைந்ததை - மொஸ்கோவில் உள்ள தரைக்கட்டுப்பாட்டு நிலையத்தில் இருந்து - விண்வெளி உறவினர்களும், நண்பர்களும் கண்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

# நேபாள அரசு - மாவோ போராளிகள் முதற்கட்ட பேச்சுவார்த்தை நடந்தது

(காத்மண்டு)


நேபாள அரசாங்கத்திற்கும் மாவோ போராளிகளுக்கும் இடையில் நடைபெற்ற முதலாவது கட்ட சமாதானப் பேச்சுக்கள் நல்ல முறையில் நடந்ததாக இரு தரப்பினரும் அறிவித்துள்ளனர்.

ஆனால் - மன்னராட்சி முறையை நீக்குவது பற்றிய சில முக்கிய விடயங்களில் கருத்து முரண்பாடுகள் வலுத்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.



மாவோ போராளிகள்.

நேபாள அரசியல் அமைப்பை மாற்றி மக்களாட்சியைக் கொண்டு வருமாறு 1996 ஆம் ஆண்டு முதல் மாவோ போராளிகள் ஆயுதப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.



நேபாள அரசர் கயேந்திரா

பிரதிப் பிரதமர் பத்ரி பிரசாத் மண்டல் தலைமையிலான ஆறு பேர் கொண்ட அரச தரப்புக் குழுவுடன் - மாவோ போராளிகள் அமைப்பின் இரண்டாவது நிலைத் தலைவரான பாபுராம் பட்டாரி தலைமையிலான 5 பேர் கொண்டகுழு - தலைநகர் காத்மண்டுவிலுள்ள அரச மாளிகைக்கு அருகிலுள்ள ஹோட்டேல் ஒன்றில் பேச்சுக்களை நடாத்தியது.

இரண்டு தரப்பினரும் கடந்த ஜனவரி 29 ஆம் திகதியிலிருந்து போர் நிறுத்தத்தைக் கடைப்பிடித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈராக்கில் புதிதாக அரசாங்கம்; நேற்று முக்கிய சந்திப்பு நடந்தது!

ஈராக்கிலுள்ள பல்வேறு இனக் குழுக்கள், மதத் தலைவர்கள், அரசியற் பிரமுகர்களுடனான சந்திப்பொன்றை - ஈராக்கை, நிர்வகிப்பதற்காக அமெரிக்க அரசால் நியமிக்கப்பட்டிருக்கும் ஜேய் கார்னர் நடத்தியிருக்கின்றார்.

ஏறத்தாழ 300 இற்கும் அதிகமான பிரதிநிதிகள் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். இவர்களில் - முன்னைய சந்திப்பில் கலந்துகொள்ளாதிருந்த ஷியா இன முஸ்லிம்களின் அமைப்பான ஈராக்கிய இஸ்லாமிய புரட்சிக் கவுன்சில் பிரதிநிதிகளும் அடங்குகின்றனர்.

சந்திப்பு நடந்த மண்டபத்தைச் சுற்றி அமெரிக்க ஹெலிகொப்ரர்களும், டாங்கிகளும் பலத்த பாதுகாப்பை வழங்கியிருந்தன.


இஸ்லாமியர்களின் புனித நூலான குரான் வாசிப்புடன் ஆரம்பமான இக் கூட்டத்தில் உரையாற்றிய ஜேய் கார்னர் -

சகல மக்களையும் மதப் பிரிவுகளையும், பழங்குடி இனக் குழுக்களையும் உள்ளடங்கிய ஜனநாயக அரசாங்கம் ஒன்று ஈராக்கில் உருவாக்கப்படுமெனக் கூறினார்.

முதலில் - பாதுகாப்பு நிலைமையை ஏற்படுத்துவதே தமது நோக்கமென்றும் கார்னர் குறிப்பிட்டார்.

இந்த வார இறுதியிலிருந்து - புதிய ஈராக்கிய அரசாங்கத்தை உருவாக்கும் முயற்சிகள் ஆரம்பமாகுமெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை - ஈராக் கைப்பற்றப்பட்ட பின்னர், அமெரிக்காவில் இருந்து உடனடியாகத் திரும்பிய எதிர்க்கட்சிப் பிரமுகர் அகமட் சலாமி - நேற்றைய கூட்டத்தில் பங்கேற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



ஜேய் கார்னர்

## உலகவலம்

### ஒரே இரவில் மட்டும் 30 பாலஸ்தீனர்கள் கைது!

மேற்குக் கரையில் தொடரும் தீவிர பதற்றத்துக்கு மத்தியில் இஸ்ரேலிய இராணுவத்தினரின் சுற்றிவளைப்புக்களில் - ஒரேயிரவில் மட்டும் 30 பலஸ்தீனர்கள் கைதாகினர்.

ஹெப்ரோன் நகரிலேயே பெருமளவிலானோர் கைதாகினர். இதேவேளை - றம்செஸ் பகுதியிலும் கைதுகள் நடைபெற்றன என இஸ்ரேலியப் படையினர் தெரிவித்தனர்.

# மும்பாய், கல்கத்தாவிலும் 'சார்ஸ்' பரவ ஆரம்பித்தது



(மும்பாய்)

'சார்ஸ்' நோயால் மேலும் இருவர் பீடிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து - இந்தியாவில் "சார்ஸ்" நோய் பரவும் வேகம் அதிகரித்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


புதிதாக 'சார்ஸ்' நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் கல்கத்தா மற்றும் மும்பாய் மாநகரங்களில் இனங் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை - 'சார்ஸ்' நோய் பாதித்த நாடுகளுக்கு விமானங்களைச் செலுத்திச் செல்ல மறுத்த 27 விமான ஓட்டிகளை - இந்திய அரசாங்கம் பதவி விலக்கியுள்ளது.


இதுவரை 'சார்ஸ்' நோயினால் இதுரை இந்தியாவில் எவரும் உயிரிழக்கவில்லையென்றும் - இந்நோய் வேகமாக பரவக்கூடியதாகவே இந்தியாவின் சுகாதார நிலை இருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.



பிலிம்பைன்ஸ் தலைநகர் மணிலாவிலிருந்து புறப்படும் விமானமொன்றில் 'சார்ஸ்' நோய்த் தடுப்பிற்காக - முகக் கவசத்தை குழந்தைக்கு அணிவிக்கும் தாய்.



மணிலா விமான நிலையத்தில் - 'சார்ஸ்' தடுப்பதற்காக வெப்பமானிப் பட்டையினால் பயணி ஒருவரது உடல்நிலை பரிசோதிக்கப்படுகிறது.



பிரேஸில் நாட்டில் - ரியோ டீ ஜெனீரோ நகரக் கடலில், குளிக்கவரும் உல்லாசப் பயணிகளை தாக்கிய சுறாவொன்று - கரையோர மீட்புப் படையினரால் உயிருடன் பிடிக்கப்பட்டது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பெருந்திரளானோர் அஞ்சலி செலுத்த முன்னாள் ஆயரின் உடல் நல்லடக்கம்

முன்னாள் யாழ். மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய கலாநிதி அருட்திரு. பஸ்தியாம் பிள்ளை தியோகுப்பிள்ளை ஆண்டகையின் இறுதி நல்லடக்க நிகழ்வு, பெருந்திரளான மக்கள் திரண்டிருக்க நேற்றைய தினம் நடைபெற்றது.

நேற்றுமாலை மரியன்னை பேராலயத்தில் கூட்டுத் திருப்பலியும் இறுதி ஆராதனையும் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் - பல்வேறு நிறுவனங்கள், ஆலயங்கள், பொது அமைப்புக்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் இரங்கல் செய்திகளும் வாசிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து இறுதிமரியாதையுடன் ஆயரது உடல், யாழ். மரியன்னை பேராலயத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் - பாப்பரசரின் பிரதிநிதி தோமஸ் ரூவும், மன்னார், இரத்தினபுரி, கொழும்பு, கண்டி, காலி, சிலாபம் , குருநாகல், மட்டக்களப்பு, கொழும்பு ஆகிய மாவட்டங்களின் ஆயர்களும் கலந்துகொண்டனர்.



மிற்சுயி ஸ்தாபனத்தின் புதிய படைப்பு
ஹினோடே சிமெந்து
வேலைக்கு முந்தும் - ஜப்பானிய பெயர் !

# திருமலை கடற்பகுதியில் 6 பேர் கடற்படையால் கைது!

திருமலை, பின் குடாப் பகுதியில் நேற்றுக்காலை சந்தேகத்துக்கிடமான படகு ஒன்றை வழிமறித்த கடற்படையினர், அதிலிருந்த ஆறு பேரைக் கைதுசெய்தனர்.

நேற்றுக் காலை 11.20 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. பின் குடாப் பகுதியில் படகு ஒன்றை வழிமறித்து கடற்படையினர் சோதனையிட்டபோது, அதிலிருந்த சிவசேகரன் விஜயானந்தன் அல்லது ராஜா என்பவரிடம் பிஸ்ரல் ஒன்றும் ஒன்பது ரவைகளும் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டதாக கடற்படையினர் கூறியுள்ளனர்.

இந்தப் படகில் இருந்த மூன்று ஆண்கள், ஒரு பெண், ஐந்து வயதுக் குழந்தை ஆகியோரையும் கடற்படையினர் கைதுசெய்து விசாரணை செய்தனர். சம்பூரிலிருந்து பின் குடாவுக்குச் செல்வதாக இவர்கள் கூறினர். இந்தச் சம்பவம் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கும் பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டிருப்பதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

# புலிகளுடன் பேச நோர்வே குழு வன்னிக்கு!

(கொழும்பு)

நோர்வே தூதுக்குழுவொன்று இந்த வார நடுப்பகுதியில் வன்னிக்கு விஜயம்செய்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடாத்த விருப்பதாக நோர்வே தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக ஆராய்வதற்காகவே நோர்வே தூதுக்குழு வன்னிக்குச் செல்லவுள்ளது.

சமாதானப்பேச்சுக்களில் இருந்து புலிகள் விலகிக்கொண்ட பின்னர் - புலிகளுக்கும் நோர்வேக்கு மிடையில் நடைபெறும் முதல் சந்திப்பு இதுவாகும்.

விடுதலைப் புலிகள் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசவுள்ள இந்த நோர்வே தூதுக்குழுவில் - புதிய நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கரும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

# யாழ்.நகரிலுள்ள படைத்தளம்...

யத்தில் இரண்டு தனியார் ஹோட்டேல்களும், 80 வீடுகளும் அமைந்துள்ளன. இந்தக் கட்டடங்களில் இராணுவத்தினரும், பொலிஸாரும் தற்போது நிலைகொண்டுள்ளனர்.

இவர்களை அப்புறப்படுத்துமாறு அரசாங்கத்திடமும், படைத்தரப்பிடமும் - விடுதலைப் புலிகளும், தமிழ் அரசியற் கட்சிகளும், அரசசார்பற்ற நிறுவனங்களும் கோரிக்கை விடுத்தன. இதனடிப்படையில் இராணுவத்தினரையும் பொலிஸாரையும் மாநகர சபை காணிப் பகுதிக்கு மாற்ற பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்தது.

எனினும் - விடுதலைப் புலிகளும், அரசியற்கட்சிகளும் இதற்கு முழு அளவில் எதிர்ப்புத் தெரிவித்தன.

இந்த எதிர்ப்புகளையடுத்து இராணுவத்தினரையும், பொலிஸாரையும் தனியார் கட்டடங்களிலிருந்து அகற்றும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், இராணுவக் கட்டளை அதிகாரிகள் மற்றும் யாழ்.குடாநாட்டுக்கான இராணுவத் தளபதி ஆகியோருடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தியது.

இப்பேச்சுவார்த்தைகளின் தொடராக கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெற்ற இறுதிச் சந்திப்பின்போது - யாழ்.நகரின் உயர்பாதுகாப்பு வலயத்திலிருக்கும் இராணுவத்தினரையும், பொலிஸாரையும் யாழ்.கோட்டைப் பகுதிக்கு இடமாற்றுவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புதிய இடத்தில் இராணுவத்தளம் அமைப்பதற்காக இந்தியாவிலிருந்து தருவிக்கப்படும் உபகரணங்களைக் கொண்டு கட்டுமானங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்ன தெரிவித்தார்.

# தேசியத் தலைவருக்கு...

யாழ்.மாவட்ட மக்கள் சார்பாக எடுத்துவரப்பட்ட வெற்றிக் கேடயத்தை - கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, சோதியா படையணி சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினால் தலைவர் பிரபாகரனுக்கு வழங்கப்பட்ட வெற்றிக் கேடயம் - ஜெயந்தன் படையணித் தளபதி லெப்.கேணல் ஜெயாதனிடம் வழங்கப்பட்டது.

வவுனியா மாவட்ட மக்களின் சார்பாக கொண்டுவரப்பட்ட வெற்றிக் கேடயம் - மூத்த தளபதி கேணல் ஜெயத்திடம் கையளிக்கப்பட்டது.

நேற்று மதியம் 12.45 மணியளவில், யாழ்.செயலக முன்றிலிலிருந்து யாழ்.மாவட்ட மக்களின் சார்பாக எடுத்துச்செல்லப்பட்ட வெற்றிக்கேடயம் தாங்கிய ஊர்திப்பவனி ஆரம்பித்தது. இதன் முதல் நிகழ்வாக ஈகச் சுடர் ஏற்றும் நிகழ்வு இடம் பெற்றது.

ஈகச்சுடரை விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியும், பொதுச்சுடரினை தெல்லிப்பளை ப.நோ.கூ சங்கத் தலைவர் சிவமகாராசாவும், நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கமும் ஏற்றிவைத்தனர்.

கொட்டும் மழையிலும் தமிழீழ தேசியக் கொடியை தாங்கிய இளைஞர் குழுவினர், அஞ்சலோட்டமுறையில் முன்செல்ல, வெற்றிக்கேடயம் தாங்கிய ஊர்திப்பவனி பின்சென்றது. ஏராளமான ஆண்களும், பெண்களுமாக ஊர்திகளில் உடன்சென்றனர்.

இந்த அஞ்சலோட்ட குழுவுடன் இளைஞர், யுவதிகள் மாறிமாறி, தேசியக்கொடியை தாங்கிய வண்ணம் பளையை நோக்கிச்சென்றனர்.

இநநிகழ்வில் ஏராளமான பொது மக்கள் கலந்துகொண்டதுடன், அஞ்சலோட்ட வீரர்களுக்கு உற்சாகமளித்தனர். முடிவிடத்தில் கேடயத்தை மாணவர் பேரவையினர் தாங்கிச்சென்று பளையில் இடம்பெற்ற நிகழ்வில் வைத்துக் கையளித்தனர்.

# பல்லாயிரம்...

பளையில் இருந்து இராணுவத்தினரின் ஆட்லறித் தளத்தை அழித்த கரும்புலிகளான மேஜர் தனுஷன், மேஜர் சுதாஜினி ஆகியோரின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவாலயத்தை, மேற்படி மாவீரர்களின் பெற்றோர் ஈகச்சுடரேற்றி திறந்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் - விடுதலைப் புலிகளின் மூத்த தளபதியும், புலனாய்வுத்துறைப் பொறுப்பாளருமான பொட்டம்மான், கேணல் பானு, கேணல் தீபன் உட்பட மூத்த தளபதிகளும், போராளிகளும், பொது மக்களும் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர். இந் நிகழ்வுக்கு விடுதலைப் புலிகளின் அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் தங்கன் தலைமை தாங்கினார்.

வெற்றி விழாவின் முதன் நிகழ்வாக - விடுதலைப் புலிகளின் படையணிகளான சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி, மாலதி படையணி, சோதியா படையணி, கடற்புலிகளின் படையணி, தமிழீழ காவற்துறையினரின் படையணி ஆகியன அணிவகுத்துச் சென்றன.

இந்தப் படையணிகளின் அணிவகுப்பு மரியாதையினை, விடுதலைப் புலிகளின் வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் மற்றும் மாலதி படையணித் தளபதி கேணல் விதுஷா ஆகியோர் ஏற்றுக்கொண்டனர்.

அணிவகுப்பு மரியாதையைத் தொடர்ந்து, அரசியற்துணைப் பொறுபபாளர் தங்கன் தலைமையுரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசையும், சோதியா படையணி சிறப்புத் தளபதி கேணல் துர்ககாவும் சிறப்புரையாற்றினர்.

நிகழ்வின் இறுதியில் கலை பண்பாட்டுக் கழக மகளிர் பிரிவினரும், பொன்னம்மான் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரும் இணைந்து கலை நிகழ்வுகளை நடத்தின.

வெற்றி விழாவையொட்டி தமிழழ விளையாட்டுத்துறையினரால் நடத்தப்பட்ட சைக்கிளோட்டப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கு கேணல் பானு பரிசில்களை வழங்கினார்.

# பேச்சுக்கு வர மறுத்தார்...

இதுபற்றி தெரியவருவதாவது - வொஷிங்ரன் உதவி வழங்கும் மாநாட்டில் விடுதல்லைப் புலிகள் கலந்துகொள்வதற்கு அமைச்சர் மிலிந்த மொறகொட முழு முயற்சி எடுப்பதாக என்று உறுதியளித்திருந்தும் அவ்வாறு நடக்கவில்லை என விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறியதாக சண்டே லீடர் அவரது பேட்டியொன்றை வெளியிட்டிருந்தது.

இக்கருத்து தவறானதெனக் கூறியும், தான் அவ்வாறு எந்த உறுதிமொழியும் வழங்கவில்லையென்றும், புலிகள் இவ்வாறு தன்னைச் சாடியிருப்பதன் மூலம், அவர்கள் மீதான உண்மைத்தன்மை பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்து, தான் இனிமேல் பேச்சுக்களில் பங்குபற்றப் போவத்தில்லையென அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்று அறிவித்திருந்தார்.

இதையடுத்து - இந்தப் பிரச்சினை குறித்து, புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், அமைச்சர் மிலிந்த மொறகொடவுடன் லண்டனிலிருந்து தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு - தமிழ்ச்செல்வன் கூறியதாக வெளியான செய்தி, திரிபுபடுத்தப்பட்டிருப்பதாகவும், அவ்வாறு அவர் தனது பேட்டியில் எதுவும் குறிப்பிடவில்லையென தமிழ்ச்செல்வனே தனக்குத் தெரிவித்ததாகவும் கூறினார்.

இதையடுத்து - மிலிந்த மொறகொட, பேச்சுக்களில் இருந்து விலகும் தனது நிலைப்பாட்டை கைவிட்டதாகக் கூறப்படுகின்றது.

அமைச்சர் மிலிந்த மொறகொடவுடன் தொலைபேசியூடாகப் பேசுவதற்கு முன்னர், ரொய்ட்டர் செய்தியாளர் மக் டொனால்ட்டுக்கு இச்சச்சரவு பற்றி தெளிவாக எடுத்துக் கூறிய அன்ரன் பாலசிங்கம் -

தற்போதைய சமாதான முயற்சிகளின் முக்கிய தூணாக அமைச்சர் மிலிந்த மொறகொட இருப்பதாகக் குறிப்பிட்டதுடன், தவறான புரிந்துணர்வினால் ஏற்பட்ட பிரச்சினையே இது என்றும் தெரிவித்தார்.

இதனால், தாம் மிகுந்த மனவேதனை அடைவதாகவும் குறிப்பிட்ட கலாநிதி பாலசிங்கம் - சண்டே லீடரில் வெளியான பேட்டியில் மொழிபெயர்ப்புத் தவறுகள் நிறைய இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

தாம் தமிழ்ச்செல்வனுடன் தொடர்பு கொண்டு விசாரித்தபோது, தான் அவ்வாறு சண்டே லீடருக்கு எதுவும் கூறவில்லையென்று அவர் மறுத்ததாகவும் பாலசிங்கம் தெரிவித்தார்.

புலிகள் வொஷிங்ரன் மாநாட்டுக்கு செல்லமுடியாதென்றும், அமெரிக்காவில் தடைசெய்யப்பட்ட அமைப்பு என்பதால் தாம் அதில் பங்கேற்க முடியாதென்று முன்னரே தெரியுமென்றும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ரொய்ட்டர் செய்தியாளருக்குத் தெரிவித்துள்ளார்.

# படையினரை எமது வழிக்கு கொண்டுவருவது கடினம்!

## கவலை தெரிவிக்கின்றார் பிரட்மன்

(யாழ்ப்பாணம்)

தற்போதைய நிலைமைகள் குறித்து படையினருக்கு விளக்கமளித்து வருகின்றபோதிலும், அவர்களை தமது வழிக்குக் கொண்டு வருவது கடினமானதாக இருப்பதாக பிரதமரின் செயலர் பிரட்மன் வீரக்கோன் கவலை தெரிவித்துள்ளார்.

பலாலி படைத்தளத்தில் இராணுவ அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் செய்தியாளரிடம் பேசியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் பேசும்போது -

யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள படையினர் நல்லுறவைப் பேணி வருகின்றனர். மீண்டும் ஒரு யுத்தத்தை ஆரம்பிக்க யாழ்ப்பாணத்திலுள்ள படையினர் முயற்சிக்க மாட்டார்களென நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரதமர் ரணிலின் விசேட பணிப்பின் பேரிலேயே பிரட்மன் யாழ். வந்திருந்தார்.

# தலைவரின்...

மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஆனையிறவுத் தளத்தை கைப்பற்றிக்கொண்டதோடு, தீச்சுவாலையை வெற்றி கொண்டதன் மூலம் எமது பலத்தை கொழும்பு அரசுக்கு நிருபித்தோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பனையால் வீழ்ந்து மரணம்

பனைமரத்தில் ஏறியவர் அதிலிருந்து வழுக்கி வீழ்ந்து மரணமானார். இச்சம்பவம் நேற்று மாலை கரவெட்டிப் பகுதியில் இடம்பெற்றது. சம்பவத்தில், அதேயிடத்தைச் சேர்ந்த செல்லப்பா கந்தசாமி (வயது 47) என்பவரே உயிரிழந்தவராவார்.

# மரண அறிவித்தல்

## அன்னலிங்கம் விஸ்வலிங்கம்

(V.T.A. விஸ்வா)

திருநெல்வேலி கிழக்கு, முடமாவடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது வன்னியில் வசித்துவந்தவருமாகிய அன்னலிங்கம் விஸ்வலிங்கம் (பழம்பெரும் நாடகக் கலைஞரும், புலிகளின் குரல் வானொலி சேவையின் நாடகக் கலைஞரும், ஒலிபரப்பாளரும்) 27.04.2003 அதிகாலை காலமானார்.

அன்னார், திருநெல்வேலி காலஞ்சென்ற பிரபல சோதிடர் தம்பிப்பிள்ளை அன்னலிங்கம் - பாக்கியம் தம்பதிகளின் புதல்வரும், காலஞ்சென்ற சூரியகுமாரி, சுமதி ஆகியோரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சோபன சுகிர்தா, யவனவினோதா (சுவிஸ்), விஸ்வசூரியன் (போராளி நாவண்ணன்), விஸ்வசந்திரன், சூரியலக்ஷ்மி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வாலாம்பிகை (பிரான்ஸ்), கனகசபாபதி (பொல்காவல வர்த்தகர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், நவநீதசீலன் (பிரான்ஸ்), பத்மகுணசீலன் (பூங்கனிச்சோலை உரிமையாளர்), புவிராஜசீலன் (பிரான்ஸ்), திருமதி ருத்திரசீலி இராசதுரை (பிரான்ஸ்), திருமதி நவநீதசெல்வி விக்னேஸ்வரன் (பிரான்ஸ்) சற்குணசீலன் (பிரான்ஸ்) திருமதி ஜெயசீலி சோதிநாதன் (பிரான்ஸ்), விஜயகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அனோஜன் (சுவிஸ்), தேனுஜா (சுவிஸ்), அருண்புஜன் (யாழ்.இந்துக் கல்லூரி, தரம் - 10), உருத்திரா (யாழ்.இந்துமகளிர் கல்லூரி, தரம் - 8) ஆகியோரின் பேரனும் சஜி, கங்கா, சந்தணகுமார் (இத்தாலி) ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (29.04.2003) செவ்வாய்க்கிழமை அவரின் திருநெல்வேலி இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு தகனக் கிரிகைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
விஸ்வசந்திரன் (மகன்)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 29.04.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.